www.tamilarangam.net


# வீரவேங்கை

ஆசிரியர் கோவை மகேசன்

சுதந்திர இயக்க வெளியீடு - உறுமல் ஒன்று


## அத்துலத் முதலிக்கு விடுதலைப்புலிகள் பகிரங்கக் கடிதம்!

# சிங்கள ராணுவத்தை ஓடோட விரட்டுவோம்!

## சுதந்திரத் தமிழீழம் அமையும்வரை ஆயுதப் போராட்டம் தொடரும்!

## சரணாகதிப் பேச்சுக்கே இடமில்லை!

**"எமது மக்கள் உங்கள் இராணுவத்தினால் தெருவோரங்களில் படுகொலை செய்யப்பட்டு, சுட்டெரிக்கப்படுவதை நாம் வெறுமனே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எமது ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு நாம் ஒருபோதும் சரணாகதியடையப் போவதும் இல்லை. நாம் முன்னைய காலத்தைவிட மேலும் மன வைராக்கியத்தோடு தொடர்ந்து போர் புரிவோம். சிங்கள இராணுவமும் அதன் ஏஜண்டுகளையும் தமிழீழத்திலிருந்து ஓடோட விரட்டியடித்து, சுதந்திர சோசலிச தமிழீழ அரசை அடையும் வரை நாம் ஓயமாட்டோம்."**

இவ்வாறு திரு. பிரபாகரன் தலைமையில் இயங்கும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் சிறீலங்காவின் உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலிக்கு எழுதியுள்ள பகிரங்கக் கடிதத்தில் கூறியுள்ளது.

அதில் மேலும் கூறியிருப்பதாவது:—

"நீங்களாகவே கூறிக் கொள்ளும் "பயங்கரவாதம்" என்பதை ஒழிப்பதற்கெனக் கூறிக் கொண்டு தமிழ் ஈழத்தில் இராணுவ ஆட்சியொன்றைப் புகுத்தி, எமது மக்களுக்கு எதிராகப் போர் தொடுத்துள்ளீர்கள்.

"மனித நீதியின் அடிப்படையில் தமது சட்ட பூர்வமான உரிமைகளைக் கோரி வருவது தவிர வேறு எவ்வித குற்றமும் செய்யாத எமது மக்கள்மீது இனரீதியான போரைச் சுமத்தியுள்ளீர்கள்.

"எமது தமிழ் மக்கள் மீது கொண்ட ஆழமான வெறுப்பின் காரணமாக, வயோதிபர் முதல் குழந்தைகள் வரை அப்பாவி மக்கள் அனைவரையும் பயங்கரவாதிகள் என்று பட்டம் சூட்டி கொலை செய்து வருகிறீர்கள்.

"அப்பாவி மக்களுக்கு எதிராக கேடு கெட்ட முறையில் இனவாத யுத்தம், இனக் கொலை நடத்துகிறீர்கள். இதன் மூலம் எமது மக்களைப் படிப்படியாகக் கொன்றொழிப்பதே உமது நோக்கம்.

தமிழ் தேசிய இனப் பிரச்சினைக்கு இட்லர் போன்று 'இறுதித் தீர்வு' காண, இரா



ணுவத்தை முடுக்கிவிட்டுள்ளீர்கள். இட்லரையும் வெல்லக் கூடிய முறையில் 'இனக் கொலை'க் கலையில் நீங்கள் மிக வல்லவராயிருக்கிறீர்கள். ஒரு மக்களின் சுதந்திரப் போராட்ட வரலாற்றில் பக்கத்துக்குப் பக்கம் இரத்தமும் கண்ணீரும் காணப்படுவதற்கான பழியையும் பாவத்தையும் சுமக்கப் போகிறீர்கள்.

"நீங்கள் பயங்கரவாதம்" என்று குறிப்பிடுவதானது உண்மையில் ஒடுக்கப்படும் மக்களின் புரட்சிகர எதிர்ப்பேயன்றி வேறல்ல. உங்கள் அரச பயங்கரவாதம் பெற்றெடுத்த குழந்தையே தமிழ் ஈழத்தில்தோன்றியுள்ள ஆயுதப் போராட்டமாகும். இதை உருவாக்கியவர்கள் நீங்களே.

"இது மக்கள் புரட்சியாக இருப்பதனால், இராணுவ

(தொடர்ச்சி 12ம் பக்கம்)





### நிர்மலா சூளுரை!

"சிங்கள மக்களுடன் இணைந்து வாழ்வது என்ற பேச்சுக்கே இனி இடமில்லை. எமது தாய் நாடான தமிழீழத்தின் சுதந்திரத்தை வென்றெடுத்தே தீருவோம். இதில் எதுவித சமரசத் திட்டத்துக்கும் இடமில்லை. சுதந்திர சோசலிசத் தமிழீழ அரசை அமைக்கும் வரை தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போடமாட்டார்கள். எனது உயிர் மூச்சுள்ள வரை தமிழீழவிடுதலைக்குப் போராடியே தீருவேன்."

இவ்வாறு சென்னைவந்துள்ள யாழ்பல்கலைக் கழகத்தின் முன்னாள் அரசியல் விஞ்ஞானப் பேராசிரியையான வீராங்கனை திருமதி நிர்மலா நித்தியானந்தன் சூளுரைத்துள்ளார்.

1982 ஆம் ஆண்டு நவம்பர் 20 ஆம் நாள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்கைது செய்யப்பட்டு வெலிக்கடைச் சிறையிலும், பின்னர் மட்டக்களப்புச் சிறையிலும் வைக்கப்பட்டிருந்த திருமதி நிர்மலா நித்தியானந்தன் 10 - 6 - 84 இல் மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து பிரபாகரனின் தலைமையில் இயங்கும் விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவினால் விடுவிக்கப்பட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளரான இவர் இப்போது அகதியாகத் தமிழகம் வந்துள்ளார். இங்கு 1983 செப்டம்பர் சிறையுடைப்பின் போது தப்பி வந்த தமது கணவர் திரு. நித்தியானந்தனுடன் ஒன்றரை ஆண்டுகளுக்குப் பின் இணைந்துள்ளார்.

## தமிழீழ சுதந்திரம் எங்கள் பிறப்புரிமை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# கேள்வியும் விளக்கமும்

எஸ். சுந்தரம்,
மதுரை

கே: தமிழ் ஈழம் விடுதலை பெற்று, விரைவில் அகதிகளாக உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்கள், தங்கள் தாயகம் திரும்ப வழியென்ன?

ப: ''இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து, அதனை அவன் கண்விடல்'' என்ற வள்ளுவரின் அறிவுரைப்படி நடக்க வேண்டும். இன்றுள்ள தமிழ் ஈழ விடுதலை இயக்கங்களிலே, அனுபவமும் ஆற்றலும், கொள்கையுரமும், அஞ்சா நெஞ்சமும் விடுதலை இராணுவத்தை வெற்றிப் பாதையில் நடத்தி தமிழ் ஈழத்தை வென்றெடுக்கும் இராணுவத் திட்டமும் விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் தம்பி பிரபாகரனிடம் மட்டுமே உண்டு. கையில் வெண்ணெய்யை வைத்துக் கொண்டு நெய்க்கு அலையத் தேவையில்லை. தமிழ் ஈழ விடுதலை இயக்கங்கள் அனைத்தும், பிரபாகரனுடன் அணியமாகி, அனுபவமுள்ள அவரையே தமது இராணுவத் தலைமைத் தளபதியாக ஏற்று பி. எல். ஓ. போன்று இணைய வேண்டும். தமிழ் மக்கள் சந்தர்ப்பவாத கூட்டணித் தலைமையை முற்றாக நிராகரித்து விட்டு பிரபாகரன் தலைமையை முழுமையாக ஏற்றுக் கொள்ள வேண்டும், தமிழ்ஈழ விடுதலை விரைவு பெறுவதற்கு இதுவே ஒரே வழி.

x x x

எஸ். கந்தசாமி,
சென்னை. 6

கே: தமிழ் ஈழத்தில் ஆக்கிரமிப்புச் சிங்கள இராணுவத்தை எதிாத்துக் களத்தில் நின்று இன்று போராடுவது யார்?

ப: பிரபாகரன் தலைமையிலான தமிழ்ஈழவிடுதலைப் புலிகளே போராட்டக்களத்தில் நின்று சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவத்தைக் கதி கலங்க அடித்து வருகிறார்கள். மட்டக் களப்புச் சிறையிலிருந்து நிர்மலா நித்தியானந்தனை மீட்டதும் சிங்கள விமானப் படை வாங்கவிருந்த 60 இலட்ச ரூபா பெறுமதியுடைய விமானத்தை அழித்ததும் கடைசியாக அவர்களது சாதனைகள், ஏனைய இயக்கத் தோழர்கள் சென்றாலும், எப்படியாவது சிங்களப் படைகளிடம் மாட்டிக் கொண்டு விடுகிறார்கள். இது அவர்களுடைய தவறல்ல; அவர்களுக்குப் பயிற்சி அளித்த தலைவர்களின் தவறு; சிங்கள இராணுவத்தின் அட்டகாசத்தை விடுதலைப் புலிகளே அடக்கி வருகிறார்கள். இஸ்ரேல் பயங்கரவாதிகளும் பிரிட்டிஷ்கூலிப்படைகளும் அழைக்கப்பட்டார்கள் என்றால், விடுதலைப்புலிகளின் அதிரடிப் போர்களுக்கு சிங்கள இராணுவத்தினால் ஈடு கொடுக்க முடியாமல் போனதும் ஒரு காரணம்.

x x x

க. சுந்தரலிங்கம்,
கும்பகோணம்

கே: உங்களை அமெரிக்க அடிவருடி என்று EPRLF பத்திரிகை 'ஈழ முழக்கம்' சாடியிருக்கிறதே!

ப: இழிமொழிகள், வக்கணைகள், அபாண்டங்கள் ஆகியவற்றைத் தாங்கித் தாங்கி எனக்குப் பழகிப் போய்விட்டது. அதுசரி, அமெரிக்க சி. ஐ. ஏ. ஏஜண்டுகளான அலன் தம்பதியினர் EPRLF காரரைத்தானே, ''நல்லவர்கள், பண்பாளர்கள் படித்தவர்கள், அவர்கள் தமிழ் ஈழப் பிரிவினை பற்றி எதுவுமே பேசவில்லை; மனித உரிமை பற்றியே பேசினார்கள். பயங்கரவாதிகளல்ல அவர்கள் விடுதலைப் போராளிகள்'' என்று நற்சான்றிதழ் வழங்கியுள்ளனர். சி. ஐ.ஏ. உளவாளிகளின் பாராட்டைப் பெருமையாகக் கருதிய இப்புரட்சிக் குஞ்சுகள், அதை நியூஸ்டுடே, மக்கள் குரல் பத்திரிகைகளுக்கும் கொடுத்துப் பரவசம் அடைந்தார்கள். 'வசிட்டர் வாயால் பிரும்மரிஷி' என்ற பாராட்டுக் கிடைத்தது போல சி.ஐ. ஏ. உளவாளிகளின் வாழ்த்துக்களை பெருமையாக எடுத்துக் கொண்டார்கள். நான் இவர்களைக் கண்டித்ததெல்லாம், இந்தியாவின் ஓர் அங்கமான தமிழ்நாடு அரசின் பெயரை இப்பிரச்சினைக்குள் இழுத்ததை மட்டுமேதான்.

கே: தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனுக்கும் அமிர்தலிங்கத்துக்கும் நெருக்கமான தொடர்புண்டு என்று கூறுகிறார்களே!

ப: இது அமிர்தலிங்கம் கும்பலும், பிரபாகரனின் எதிரிகளும். பிரபாகரனின் 'இமேஜை'க் கெடுப்பதற்காக வேண்டுமென்றே பரப்பி விடும் ஒரு கட்டுக்கதை. பிரபாகரன் மீது அமிர்தலிங்கத்துக்கு அவ்வளவு நெருக்கம் இருக்குமானால், தனது மகன் காண்டீபனைக் ''கமாண்டரின் சீஃப்'' ஆக வைத்து தமிழ் ஈழத் தேசிய இராணுவம் (Tena) என்ற புதிய படையொன்றை அமைக்க வேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டு விட்டது? புலிகள் இயக்கத்தில் சேர்ப்பதாகப் பொய் கூறி இளைஞர்களைச் சேர்க்கிறார்கள். புலிகள் இயக்கத்துக்கு நிதி தருமாறு அமிர்தலிங்கம் அம்மையார் மலேசியா, சிங்கப்பூரில் பணம் திரட்டி வந்துள்ளார். பொய்யிலே பிறந்து, பொய்யிலே வளர்ந்து பொய்யிலே அழியும் கூத்தணியினரைப் பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்?

x x x

கே. சுமதி
திருவான்மியூர்

கே: வீரவேங்கையின் இலட்சியம் என்ன?

ப: தமிழ் ஈழத்தின் பரிபூரண விடுதலைக்காக உழைப்பது, தமிழ் ஈழ இலட்சியத்தின் துரோகிகள் யாராயிருந்தாலும், தயவு தாட்சண்யம் ஈவு இரக்கமின்றி அவர்களைச் சாடுவது; தமிழ் ஈழ விடுதலைக்காகக் களத்திலிறங்கிப் போராடுவோருக்குப் பக்கபலமாக இருப்பது; மொத்தத்தில் தமிழினத்தின் ஒட்டுமொத்தமான சுதந்திரமே 'வீரவேங்கையின் ஒரே இலட்சியம்.

கே: தமிழ் நாட்டில் தமிழ் ஈழ விடுதலைக்கு ஆதரவு எப்படி?

ப: மொத்தத்தில் ஐந்து கோடித் தமிழர்களுமே எமக்குப் பக்கபலமாக இருக்கிறார்கள்; அண்ணா திமுக, திமுக, தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ், திராவிடர் கழகம் ஆகிய கட்சிகள் தமிழ் ஈழ விடுதலையை ஏற்று அதற்காக குரல் கொடுக்கின்றன. மதுரை ஆதீனம் எங்கு பேசினாலும் தமிழ் ஈழ விடுதலைக்காகவே குரலெழுப்புகிறார். அமிர்தலிங்கம் கூட்டணியினரை விட, இங்கு நான் மேலே குறிப்பிட்ட கட்சிகளுக்கு தமிழ் ஈழ விடுதலையில் அதீத ஆர்வமும் அக்கறையும் அதிகம்.

x x x

கே. கே. சந்திரன்
அடையாறு.

கே: தமிழ் ஈழ விடுதலைக்குப் போராடும் இளைஞர்களுக்கு நீங்கள் வழங்கும் அறிவுரை என்ன?

ப: தமிழ் ஈழ விடுதலைக்கு ஆயுதப் போராட்டமே ஒரே வழியென்றாலும், அது மட்டுமே எல்லாம் ஆகிவிடாது. விடுதலை, அரசியல், சமுதாயம், புதிய நாட்டைக் கட்டியெழுப்புதல், போன்ற பல்துறை நூல்களையும் அவர்கள் படித்துணர வேண்டும். விடுதலை பெறும் தமிழ் ஈழத்தை நாளை பாதுகாத்து நல்லாட்சி நடத்த வேண்டிடியதும் இளைஞர்களுடைய பொறுப்பு என்பதை அவர்கள் மறந்து விடக் கூடாது.

கே: திருமதி இந்திராகாந்தி இலங்கைக்கு வரும் போது தமிழ் ஈழப் பகுதிகளுக்கும் வரவேண்டும் என்று கூட்டணி சிவசிதம்பரம் அவசரப்பட்டு அறிக்கை விட்டது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: நானும் இருக்கிறேன் எனபதைக் காட்ட அப்படி ஒரு அறிக்கையை அந்த மனிதர் விட்டிருக்கலாம்; ஜெயவர்த்தனேயின் அழைப்பை ஏற்று திருமதி இந்திராகாந்தி இலங்கை செல்லமாட்டார் என்பதை புரிந்து கொள்ளும் அற்ப அரசியல் தெளிவு கூட இன்றி சிவ சிதம்பரம் அவசர அறிக்கை விடுத்திருக்கிறார்.

கே: நியூயோர்க்கில் நடைபெற்ற உலகத்தமிழர் மாநாட்டைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: தமிழ் ஈழ மண்ணில் ஆக்கிரமிப்புச் சிங்கள அரசோடு மோதிக்கொண்டிருக்கும் தமிழ் ஈழ விடுதலை வீரர்களின் குடும்பங்கள் பட்டினி கிடக்க, குஞ்சு குளு ஓட்டலில் பல ஆயிரம் டாலர்கள் செலவழித்து மாநாடு நடத்தியுள்ளனர். தாய் பட்டினி கிடக்க மகன் கும்பகோணத்தில் கோதானம் செய்த கதைதான்.

கே: நீங்கள் நடந்து வந்த பொதுவாழ்வில் கண்ட மறக்க முடியாத அனுபவம் என்ன?

ப: என்னை ஏணியாகப் பாவித்துப்புகழின் உச்சிக்கு ஏறியவர்கள், பின்னர் என்னை உதைத்துத் தள்ளியதுதான்.

''நன்றாற்றலுள்ளும்
தவறுண்டு,
அவரவர் பண்பறிந்
தாற்றாக் கடை''

என்ற குறளின் பொருளை இப்போதே உணர்கிறேன்.

## இனக்கொலை இலங்கையின் உள்நாட்டு விவகாரமல்ல!

''இனக்கொலை என்ற குற்றம் இலங்கை அரசின் உள்நாட்டு விவகாரமும் அன்று; அவ்வாறு இருக்கவும் முடியாது. தமிழ் சிறுபான்மை இனத்தினரின் மனித உரிமைகள் தொடர்ச்சியாக மீறப்பட்டு வருவது எமக்கெல்லாம் கவலை அளிக்கிறது. இன ரீதியான வன்முறைகளை நிறுத்த முயற்சிப்பது மனித இனம் முழுவதற்கும் பொதுவானது.

யூதர்களின் பிரச்சினைக்கு ''இறுதித் தீர்வு'' கண்டிட, 45 ஆண்டுகளுக்கு முன், இட்லர் நச்சுவாய்வு அறைகளை உருவாக்கிய போது உலகம் அதை வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தது, உலகின் கிழக்கும் மேற்கும் பாசிசத்துக்கு எதிராக எச்சரித்தது. யூத இனம் அழிக்கப் படுவதைக் கண்டு உலகம் கவலை கொண்டிருந்தாலும் அதைத் தடுப்பதற்கு யாரும் எதுவும் செய்ய முன்வரவில்லை. 60 இலட்சம் யூதர்கள் கொல்லப்பட்டனர், நாற்பது ஆண்டுகளுக்குப்பின்னர், இப்பொழுது இலங்கையில் 25 இலட்சம் தமிழர்கள் அழிக்கப்பட்டு வருகின்றனர். இந்த இனக்கொலையை உலகம் இன்னும் சரிவர அறியாமலிருக்கிறது.

சிங்கள இனக் கொலையில் இருந்து தப்புவதற்கு தமிழர்கள் வெளிநாடுகளில் குடியேறுகிறார்கள். ஆனால் இது இனப் பிரச்னைக்குத் தீர்வாக முடியாது. 3000 ஆண்டுகளாகத் தாம் வசித்த சொந்த தாய் நாட்டை விட்டு வெளியேற தமிழர்கள் விரும்பாவிடினும், ஏற்கெனவே 50000க்கு மேற்பட்ட அகதிகள் வந்து இருக்கிறார்கள். தமது உயிருக்கும். உடமைக்கும் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் காரணமாகவே தமிழர்கள் தற்காலிமாக வேறு இடங்களில் குடியேறுகிறார்கள், அவர்கள் தமது குடும்பங்களையோ, வீடுகளையோ கைவிட்டு ஓடி வரவில்லை.

**அவர்கள் தமது நாட்டில் தங்கியிருந்து தமது சுயமரியாதைக்காகவும், தேசிய சுயநிர்ணய உரிமைக்காகவும் போராடத் தயாராக உள்ளனர்.**

—அவுஸ்ரேலிய மக்கள் பிரதிநிதிகள் சபையில் திரு' லூயிஸ் கென்ற் (Mr. Lewis-Kent) ஆற்றிய உரையின் ஓர் பகுதி.

**'வீர வேங்கை'**
தொடர்பு கொள்ள
வேண்டிய முகவரி

'' விரவேங்கை '' வெளியீட்டுக்கு கட்டுரைகள், செய்திகள். கவிதைகள், மற்றும் நன்கொடைகள் அனுப்ப விரும்பும் அன்பர்கள் பின்வரும் முகவரிக்கு அனுப்பலாம்.

**எஸ். ஆர். கோவை மகேசன்**
ஆசிரியர்: ''வீரவேங்கை''
41/1, முத்து கிராமணித் தெரு
சாந்தோம், சென்னை-600 004,
இந்தியா.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 'வீரவேங்கை' உறுமுகிறது!

## பௌத்த சிங்களப் படை நடுங்கட்டும்!

அன்புத்தம்பி,

ஏறத்தாழப் பன்னிரண்டு திங்களாகி விட்டன உன்னோடு கடிதத்தொடர்பு கொண்டு, உனக்குச் சொல்லிட வேண்டிய உன்னோடு பகிர்ந்து கொள்ளிட வேண்டிய எண்ணக் கருவூலங்கள் இதயத்துச் செய்திகள் — எத்தனை எத்தனையோ அலை போல என் நெஞ்சிலே எழுந்து எழுந்து என் நெஞ்சுக்குள்ளேயே மடிந்து போய் விட்டிருக்கின்றன இதுநாள் வரை!

என் எண்ணக் கருவூலங்கள் மட்டும் தானா? என் உடலே கூடச் சிங்களக் கொடுங்கோலர்களின் நெடிய மதில் கொண்ட வெங்கொடுமை சிறைக் கூடமாம் வெலிக்கடைச் சிறையிலே கண்ட . துண்டமாக்கப் பட்டுக் குற்றுயிரும் குலையுயிருமாகக் கொல்லப்பட்டு விட்டேன் என்று கூட வல்லவா உலக முழுவதும் செய்தி பரவியது? எனக்காகக் கண்ணீர் சொரிந்த, பதைத்துத் துடித்த, பரிதவித்து அரற்றிய அன்பு நெஞ்சங்கள் தாம் எத்தனை எத்தனை? தமிழ் நாட்டு ஏடுகளிலே கூட நான் செத்து விட்டேன் சிங்களவர் கைகளினால் சிறைக்கூடத்திலே என்று எட்டுப் பத்தித் தலைப்பிட்டு செய்தி வந்து, தமிழ்நாட்டிலே எனக்காகக் கண்ணீர் சிந்தி அனுதாபத் தீர்மானங்கள் கூட நிறைவேற்றப் பட்டன என்பதை அறிந்திட்ட போது என் கண்களில் வடிந்தது ஆனந்தக் கண்ணீரே தவிர— துயரக்கண்ணீரன்று;

ஆமாம் தம்பி, உயிரோடு இருக்கும் போதே நான் சிங்கள வெறியர்களால் கொன்றொழிக்கப் பட்டு விட்டேன் என்கின்ற செய்தி வந்துற்ற போது, எத்தனையோ ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான தமிழ் இதயங்கள் துடி துடித்துக் கதறின; கலங்கின என்பதையெல்லாம் அறிந்திடும் போது இந்தச் சாமான்யன் மீது அவர்கள் வைத்துள்ள பாசத்தையும் பேரன்பையும் என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது. இத்தனை அன்பும் பாசமும் என்மீது சுரந்திடக் காரணம்தான் என்ன?

நான் ஏதோ மெத்தப்படித்த மேதாவியும் அல்ல—செல்வச் சீமானுமல்ல—பதவி நாற்காலியிலே அமர்ந்திருந்தவனுமல்ல — பாராளுமன்றக்கதிரைக்கு குறி வைத்தவனும் அல்ல; சாமான்யன் மிக மிகச் சாமான்யன்!

எனது கையிலே இருந்ததெல்லாம் எழுதுகோலும் ஏடும்தான்! அவற்றை எனது தமிழினத்தின் விழிப்புணர்ச்சிக்கு முழுமையாகப் பயன் படுத்தினேன்; சாதி வேறுபாடுகளையும், சழக்கர் தம் மூடப்பழக்க வழக்கங்களையும் களைந்தெறியப் பயன்படுத்தினேன்; தமிழ்த் தேசிய உணர்வைத் தட்டியெழுப்பிடப் பயன் படுத்தினேன்; எம் உயிருக்குயிரான தாய்த் திருநாடாம் தமிழீழத் திருநாட்டைப் பலவந்தமாக ஆக்கிரமித்து, கொடுங்கோலாட்சி நடத்தும் நவகாலனித்துவ பாசிச சிங்கள ஏகாதிபத்திய முதலாளித்துவ அரசின் முதுகெலும்பை முறித்தெறிவதே நம் கடன் என்கிற எண்ணத்தை தமிழர் நெஞ்சங்களிலே ஊட்டினேன்; சுதந்திர சோசலிசத் தமிழீழ நாட்டை உருவாக்குவதற்கே நாம் பிறவியெடுத்துள்ளோம் என்பதனை என் தமிழீழ இளைஞர் சமுதாயத்தின் இரத்த நாளங்களில் எல்லாம் பரவிடச் செய்தேன்; சிங்கள அரசு போடும் சோற்றுப் பருக்கைக்கும், எச்சில் இலைக்கும் இனிப்பான பேச்சுக்கும் இனியும் ஏமாறாது தமிழினம் என்பதை நிலை நிறுத்திக் காட்டினேன்; சிங்களப் பாராளுமன்றத் தேர்தல் மாயையிலிருந்து தமிழீழ மக்களை விடுவிக்க ஓயாது சாயாது எழுதினேன்; தமது உயிரையும் துச்சமாக மதித்து சிங்கள ஏகாதிபத்தியத்தை தமிழீழத்தில் கிடுகிடுக்க வைத்திடும் தமிழீழ விடுதலைப் போராளிகளுக்கு வேகம் சேர்த்தேன்; அவர்கள் பயங்கரவாதிகள் அல்லர்—தமிழீழத்தின் சுதந்திர மான விடுதலை வீரர்கள், தேசபக்தர்கள் என்பதை வெளிப்படையாகவே எழுதிக் காட்டினேன்.

இத்தனை காரியங்களையும், இன்ன பிறவற்றையும் துணிவோடு முன்னின்று தொடர்ச்சியாக ஆற்றினேன் என்றால், அதில் அணுவளவும் சுயநல நோக்கின்றி—கடமையைச் செய் பயனை, பதவிகளை எதிர்பாராதே; என்கிற கீதையின் வழியில் இனத்துக்கான கடமையைச் செய்தேன் என்பதால்தான், என்னை நேரடியாக அறிந்திராத தமிழ் நெஞ்சங்கள் கூட, என்னோடு நேரடியாக பழகாத உறவாடாத தமிழுள்ளங்கள் கூட எனக்காகத் துடித்தன; கதறின; கண்ணீர் விட்டன என்பதையெல்லாம் எண்ணிடும் போது, இதயம் அமைதியடைகிறது; என்னைத் தமிழ்ச் சமுதாயம் உணர்ந்து புரிந்து வைத்திருக்கிறது; நன்கு அறிந்து தெளிந்து வைத்திருக்கிறது என்பதைவிட எனக்கென்று பெருமை வேறு என்ன வேண்டிக் கிடக்கிறது? எனக்கென்ன நிம்மதி வேறு வேண்டிக் கிடக்கிறது? எனக்கென்ன வேறு சொத்து வேண்டிக் கிடக்கிறது?

தம்பீ, வெலிக்கடைச் சிறைவாயிலிலே காணப்படும் கருணையே வடிவான புத்த பெருமாலின் சிலையை, அடிப்படை உரிமையை—




சுதந்திரத்தைக் கோரியதற்காக — சிறையிலே தள்ளப்பட்டிருந்த சிங்கத் தமிழ் இளைஞர்களின் உடலைக் கிழித்து அதிலிருந்து பீறிட்டெழுந்து பெருகிய குருதியினால் குளிப்பாட்டிய சிங்கள இன வெறியர்களின் ''பௌத்த தர்மத்தை' என் கண்ணாலே பார்த்தேன்; தமிழனின் குருதியை வாய்விட்டு உறிஞ்சிக் குடித்த மனித வடிவிலான சிங்கள மிருகங்களைப் பார்த்தேன்; நிராயுதபாணிகளாக கூண்டிலே தமிழர்களை அடைத்து வைத்து விட்டுக் கோடரியும் ஈட்டியும், குண்டாந்தடியும், வாளும் விறகுகட்டைகளும் பயங்கர ஆயுதங்களும் கொண்டு, கூச்சலிட்டபடியே சுற்றிவளைத்து கொலைசெய்திட்ட கொடிய மிருகங்களைக் கண்டேன்; அவர்களுக்கு உதவியாகவும், உற்சாகமாகவும் ஆதரவும்; அன்பும் நல்கிய சிறையதிகாரிகளைக் கண்டேன். இப்படுகொலைக்கு உத்தரவிட்டவர் இன வெறியில் இடி அமீனையும், இட்லரையும் வென்று விட்ட ஜெயவர்த்தனே தான் என்பதையும் நான் அறிவேன்; இவற்றுக்கெல்லாம் சாட்சியமாகத் தான் தெய்வம் என்னை உயிரோடு உலவவிட்டிருக்கிறது.

தம்பீ, நீதிக்குத் தலைவணங்காதவர்கள் முன்னே — நியாயத்துக்கு கட்டுப்படாதவர்கள் முன்னே— சாத்வீகமும் சமரசமும் பேச்சு வார்த்தையும் வெற்றி பெறாது என்பதை உணர்ந்த காரணத்தினால்தான் 1983 ஜூலை 27 ஆம் திகதி பிற்பகல், ''அதிபாதுகாப்புள்ள சிறைக் கூண்டிலே'' வைக்கப்பட்டிருந்த எங்கள் சிலரை, சிங்கள இனவெறியர்கள் கொலை செய்ய வெறியோடு வந்த நேரத்தில், ஒரே ஒரு கணத்தில் மேசைக்கால்களும், கதிரைச் சட்டங்களும் எமது கரங்களிலே ஆயுதங்களாக மாறின; வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் தானே!

என்னைவிட வயதில் இளைஞர்களான நண்பர்கள் [illegible]ராஜா, சின்ன ராசா ஆகியோர் முன்வரிசையில் நின்று சிங்கள குண்டரை எதிர்த்துப் போராட, இரண்டாவது வரிசையில் நாம் தயாராக நின்றோம்— 45 நிமிடங்கள் நீடித்தது உயிர்ப் போராட்டம்; மரணத்தின் வாயிலை நாமெல்லாம் மிதித்து விட்டுத் திரும்பினோம்:

ஆனால் ஐயகோ! என்னால் அக்கோரக் காட்சியை எண்ணிப்பார்த்திடவும் முடியவில்லை —எனது அருமை நண்பர், காந்தீய இயக்கச் செயலாளர் டாக்டர் இராசசுந்தரனார் அவர்கள், சிங்கள மிருகங்களுடன் சமரசம் பேசப் போய், வாய் திறப்பதற்கு முன்பே, கோடரியால் குருதி குபீரெனப் பெருகத் தலை பிளக்கப்பட்டாரே—அந்தக் குரூரக் காட்சியின் சாட்சியமாக நான் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்!

தம்பீ வெங்கொடுமைச் சிறையின் கதை வெகு நீளமானது. எங்கள் சிலரைப் பொறுத்த வரை செத்துப் பிழைத்து மறுபிறப்பு எடுத்து வந்திருக்கிறோம். ஆனால் இன்னும் ஏராளமான இளைஞர்கள் தமிழீழ விடுதலைக்காகத் தமது உயிரையே பலிகொடுத்த அந்த ஈடு இணையற்ற தியாகத்தின் முன்னால், சோதனைகளும் வேதனைகளும் மலிந்த எனது ஐந்து மாதச் சிறைவாழ்வு மிகவும் அற்பமானது; அதையே திருப்பித் திருப்பிக் கூறி, என்னை நானே ஏமாற்றிக் கொள்ள விரும்பவில்லை. தியாகி என்ற முத்திரையைத் தேடி நான் அலையவும் இல்லை.

ஆனால் தமிழ் சமுதாயத்தின் மிக நெருக்கடியான காலகட்டத்தில், என் அருமை உடன் பிறப்புக்களோடு சிறைக் கூடத்திலே மரணத்தையும் அரவணைத் திடத் தயாராக நானும் இருந்தேன்; அவர்களை விட்டுவிட்டு நான் எங்கும் ஓடி ஒழிந்திடவில்லை என்பதிலே நான் நெஞ்சு நிறைவு பெறுகிறேன்; நிம்மதி பெறுகிறேன்.

நான் ஏன் கைது செய்யப்பட்டுக் காராக் கிருகத்துள் தள்ளப்பட்டேன்? அதையும் தம்பீ, நீ அறிந்து கொண்டிடவேண்டும். 1983 மே திங்கள் 18 ஆம் நாள் யாழ்ப்பாணம் கந்தர் மடத்தில் துவங்கிய சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவத்தின் அராஜகம், தமிழீழ மெங்கும் தொடர்ந்தது; வவுனியா நகரம் முழுமையாக எரியூட்டப்பட்டு, திருகோணமலைக்குப் பரவிப் பிடித்தது. ஜூன் திங்கள் முழுவதும், திரிகோண மலையில் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக சிங்கள ஏகாதிபத்தியத்தின் முப்படைகளும் குடியேற்றப்பட்ட சிங்களக் காடையருமாகச் சேர்ந்து, தமிழர் கோவில்கள், குடிசைகள் வீடுகள், கடைகள், வாகனங்கள், வணிகநிலையங்கள் அனைத்தையுமே கொளுத்தினார்கள்; முப்பத்தியொரு தமிழர்கள் குத்தியும், வெட்டியும், சுட்டும், குடிசையோடு தீவைத்து கொளுத்தியும் குரூரமாகக் கொல்லப்பட்டார்கள்; தமிழர்களைப் பிடித்து சிங்களக் குண்டர்களிடம் கொடுத்த சிங்கள அரசுப்படைகள், வேடன் கையில் சிக்கிய வெண் புறுக்கள் என அத்தமிழர்கள் அணுவாகக் கொல்லப்படும் கொடுமை கண்டு அதை ரசித்து நின்றனர்!

இந்த அக்கிரமத்தைக் கண்டு கொதித்து எழுந்துதான்—சிங்கள இராணுவம், கடற்படை காவற்படை, வான் படை அனைத்தும் சேர்ந்து நடத்தும் தமிழினப் படுகொலையைத் தடுத்து நிறுத்தவும், தமிழர்களைக் காப்பாற்ற இப்பிரச்னையிலே தலையிடக் கோரியும் தமிழ்ழ விடுதலை அணியின் சார்பில் இந்தியப் பிரதமர் உட்பட, உலகின் 17 நாடுகளின் தலைவர்களுக்கு யூன்—30 1983 இல் தந்தி கொடுத்தேன். இந்த அக்கிரமத்தைக் கண்டித்து தமிழீழத்தின் வட மாநிலமெங்கும் யூலை முதலாம் நாள் அர்த்தால் நடத்துமாறு கோரிக்கை விடுத்தேன். இதைச் சகித்துக் கொள்ள முடியாத சிங்கள அரசு என்னைச் சிறையிலே தள்ளிக் கொலை செய்ய

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழ விடுதலைக்கு அமிர் கும்பலின் துரோகம்

## கூத்தணியினர் மக்கள் பிரதிநிதிகளுமல்ல; தமிழீழ ஆணையின் பாதுகாவலருமல்ல!

- நக்கீரன் -

தமிழர் விடுதலைக் கூட்டணி என முன்பு அழைக்கப்பட்ட இன்றைய அமிர்தலிங்கம் கூட்டணி, தமிழீழமக்களின் ஏக பேச்சாளன், ஒரே பிரதிநிதி என்ற நிலைகளையெல்லாம் இழந்து விட்டது. தமிழீழ மக்களால் 1977 பொதுத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட அதிகாரபூர்வ பிரதிநிதிகள் என்ற நிலையை இவர்கள் 1983 ஜூலை 22ம் திகதியுடன் இழந்து விட்டனர். தமிழீழத்தை மீட்கும் மக்கள் ஆணையைக் கைவிட்டு அரசியலில் சோரம் போய், 1979 ஆம் ஆண்டு சிங்கள ஒற்றையாட்சியின் அமைப்புக்குக் கட்டுப்பட்டதும் அதிகாரமெதுவுமற்றதுமான அபிவிருத்தி சபைகளை ஏற்றதுடன், ''தமிழீழ விடுதலைக்கான இயக்கம்'' என்ற நிலையையும் இழந்து விட்டனர். இன்று தமிழீழ அரசியலில் வெறும் குப்பை கூழங்கள் ஆக்கப்பட்டு, தமிழீழ மக்களை நடுத்தெருவில் விட்டு விட்டு, இந்தியத் தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

1967 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில், ''சுதந்திர இறைமையுள்ள சோசலிச மதசார்பற்ற தமிழீழ அரசை'' உருவாக்குவதற்குத் தமக்கு ஆணையும், அதிகாரமும் வழங்குமாறு தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமிழீழ மக்களிடம் எழுத்து மூலம் கோரினர்.

விடுதலை வேட்கையும், துடிப்பும் நிறைந்த தமிழீழ மக்கள் தமிழீழத்தின் 19 தொகுதிகளில் 18 தொகுதிகளில் இவர்களுக்கு வரலாறு காணாத வெற்றியை நல்கி, தமிழீழ விடுதலைக்குப் போராடுமாறு ஆணையிட்டனர்.

ஆனால் நடந்தது என்ன? தமிழீழ மக்கள் வைத்த அடரிமிதமான நம்பிக்கைக்கு கூட்டணியினர் கொஞ்சம் கொஞ்சமாகத் துரோகம் செய்ய ஆரம்பித்தனர்.

1977 இல் ஜே. ஆர். பதவிக்குவந்தவுடன் பயங்கரமான தமிழினப் படுகொலை நிகழ்ந்தது. 5000பேர் கொலை செய்யப்பட்டு, 50, 000 பேர் அகதிகளாக்கப்பட்டு, தமிழர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன.

### ஜே. ஆருடன் விருந்து

அந்த நேரத்தில் ஜெயவர்த்தன, தமிழர்களைப் பார்த்துப் ''போரா சமாதானமா?'' என்ற வெறிப் பேச்சுப் பேசினான். கலவரம் முடிந்து ஒரு வாரம் ஆகவில்லை—தமிழன் கொட்டிய இரத்தம் காயவில்லை — கற்பழிக்கப்பட்ட பெண்களின் கதறல் நிற்கவில்லை; அமிர்தலிங்கம் கூட்டணியினர் ஜெயவர்த்தனவின் அழைப்பை ஏற்று அவருடன் விருந்துண்டு மகிழ்ந்தனர். அன்றே ஜெயவர்த்தனவுடன் இவர்களுக்கு இருக்கும் 'கள்ள உறவு' அம்பலமாகி விட்டது.

தமிழ் ஈழத்துக்குள் சிங்கள அமைச்சர்கள் நுழைவதற்கே அஞ்சிக் கொண்டிருந்த காலம் ஒன்று இருந்தது. அதை உடைத்துக் கொண்டு முதன் முதலாக இன்றைய தமிழினக் கொலைகார அமைச்சர் அத்துலத் முதலி 1978 இல் யாழ்ப்பாணத்துக்கு வந்தான். அவனை வரவேற்றவர்கள் யார் தெரியுமா? இதே அமிர்தலிங்கம்கம்பெனியினர் தான்.

அதுவும் சிங்கள அமைச்சரை வரவேற்கப் போகாதே என்று கெஞ்சிக் கூத்தாடி, வீட்டு வாயிலில் படுத்து மறியல் செய்த தமிழ் இளைஞர்களின் மீது ஏறி மிதித்துக் கொண்டு சென்று சிங்கள அமைச்சரை வரவேற்றார்கள் அமிர்தலிங்கம் கம்பெனியினர்.

1978ஆம் ஆண்டு அமெரிக்க இராசாங்க அமைச்சின் விருந்தினராக அழைக்கப்பட்டு அங்கு சென்றார் அமிர்தலிங்கம், அதன்பின் மேலை நாடுகள் முழுவதும் சுற்றி விட்டுக் கொழும்பு திரும்பினார் அமிர்தலிங்கம்.

அதன் பின் 1979 தொடக்கத்தில் இந்தியாவுக்கு வந்து அன்றைய பிரதமர் மொரார்ஜி தேசாயைச் சந்தித்துப் பேசினார். தமிழ் நாட்டில் தம்மைப் பெரிய விடுதலை வீரராகக் காட்டிக் கொண்டு பெரும் வரவேற்பைப் பெற்றுக் கொழும்பு திரும்பினார்.

கொழும்பில் ராமகிருஷ்ண மண்டபத்தில் அமிர்தலிங்கத்துக்கு ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது. அதில் பேசிய அவர், ''தமிழ் ஈழக் கோரிக்கை என்பது என் கையிலுள்ள துருப்புச் சீட்டு, அதை ஒரு போதும் கீழே போட மாட்டேன்'' என்றார். இதிலிருந்து ''தமிழ் ஈழம் வென்று அடைய வேண்டிய ஒரு இலட்சியமன்று; சில கோரிக்கைகளைப் பெறுவதற்கான ஒரு பேரப் பொருளே'' இவரது நிலைப்பாடென்பது அம்பலமாயிற்று.

இவரது அமெரிக்க விஜயத்தையும்; டெல்லி விஜயத்தையும் அடுத்தே, அமெரிக்காவின் தூண்டுதலால் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கென்று ஒரு ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இதில் அமெரிக்க அடிவருடிகளான அமிர்தலிங்கம் கம்பெனியின் உறுப்பினராக நீலன் திருச்செல்வமும், ஏ. ஜே வில்சனும் இடம் பெற்றனர்.

ஆம், யாழ் மாவட்டத்தில் 1979யூலையில் அவசரகாலநிலை பிரகடனம் செய்யப்பட்டு, அடுத்த ஆறு திங்களுக்கிடையில் தமிழ் ஈழ விடுதலைப் போராளிகள் சிங்கள அரசின் சகல சாதனங்களும் பயன்படுத்தப்பட்டுத் துடைத்தெறியப்பட வேண்டும் என்று ஜெயவர்த்தன தனது இராணுவத்தளபதிக்கு உத்தரவு பிறப்பித்து, உடனடியாகவே பத்து இளைஞர்களை வீடு வீடாகத் தேடிச் சென்று இரவிரவாகப் படுகொலை செய்து யாழ்ப்பாணத்தில் தெருவோரங்களிலும், பண்ணைப் பாலங்களிலும் போட்ட நேரத்தில்தான் — அந்த இளைஞர்களின் பிணங்களின் மீதேறிச் சென்று ஜெயவர்த்தனவுடன் அமிர்தலிங்கம் கம்பெனியார் பேச்சு வார்த்தை நடத்தினார்கள்.

மூன்று மாதங்களாகத் தொடர்ந்துயாழ்ப்பானத்தில் அரச பயங்கரவாதம் கட்டவிழ்ந்து விடப்பட்டிருந்தும், அந்த மூன்று மாதங்களும் நாடாளுமன்றத்தில் வாய் திறக்க வில்லை அமிர்தலிங்கம் கம்பெனியார்.

சுதந்திரத்தமிழ் ஈழம் என்று மக்களிடம் ஆணை பெற்று விட்டு, சிங்கள ஜனாதிபதிக்கும், சிங்கள ஒற்றையாட்சிக்கும் அமைந்ததும், அதிகாரம் எதுவுமற்றதுமான அபிவிருத்திச்சபைகளை ஏற்கக் கூடாதென்று கூட்டணியிலிருந்த தீவிர கொள்கைவாதிகள் கட்சிக்குள்ளும் கட்சிக்கு வெளியிலும் வாதாடினர்.

''இல்லை; இந்த மாவட்ட அபிவிருத்தி சபைகளால தமிழ் மக்களுக்கு சுயாட்சி கிடைக்கும்; தந்தை செல்வா 30 வருட காலமாகப் போராடியது இப்போது கிடைக்கிறது; வில்சன், நீலன் போன்ற அரசியல் அறிஞர்கள் தயாரித்த சட்டம் இது; இதில் குடியேற்றம், காணி விநியோகம் உட்பட 15 அதிகாரங்கள் எமக்கு கிடைக்கின்றன; இதை ஏற்றே தீருவோம் என்றது அமிர்தலிங்கம் கம்பெனி, அது மட்டுமல்ல, அமெரிக்காவின் முயற்சியாலேயே இது கிடைக்கிறதாக்கும் என்றும் கொக்கரித்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் ஈழ விடுதலையைக் கைவிட்டு, திசை மாறிப் போகிறது—தமிழ் மக்களை மறுபடியும் அடிமைத்தனத்துள் தள்ளுகிறது என்பதை உணர்ந்த, தீவிர கொள்கையாளர் கூட்டணியிலிருந்து வெளியேறி, ''தமிழ் ஈழ விடுதலை அணி'' எனும் அமைப்பை உருவாக்கினர்.

மாவட்ட அபிவிருத்திச் சபைச் சட்டத்துக்கு ஆதரவாக சிங்கள நாடாளுமன்றத்தில் அமிர்தலிங்கம் கம்பெனியர் ஆதரவாக வாக்களித்த நேரத்தில் மேற்படி சட்டத்தின் நகலை, யாழ்ப்பாணத்தில் தந்தை செல்வாவின் சமாதியின் முன்னால் தமிழீழ விடுதலை அணியினர் தீயிட்டு எரித்தனர். இச்செயல் மூலம் தமிழர்களின் விடுதலை உணர்வு எடுத்துக் காட்டப்பட்டது.

பல்கலைக் கழக அறிஞர்கள், மாணவர்கள் தீவிர கொள்கைவாதிகள் அத்தனை பேரும் எச்சரித்தும் எமக்கே எல்லாம் தெரியும் என்ற திமிரோடு அமெரிக்காவின் கைப்பொம்மையாக, ஜெயவர்த்தனவோடு சேர்ந்து மாவட்ட அபிவிருத்திச் சபை சட்ட வாக்கலிலும், நடைமுறையிலும் பங்கு பற்ற மறுத்து, தமிழ் மக்கள் தந்த தமிழ் ஈழ விடுதலை என்ற ஒரே இலட்சியத்தை விட்டுக் கொடாது அமிர்தலிங்கம் கம்பெனியார் அன்று நின்றிருந்தால், தமிழ் மக்களின் நிலை இன்று வேறாகியிருக்கும்; தமிழ் மக்களிடையே இவ்வளவு தூரம் பிளவும் ஏற்பட்டிராது.

கூட்டணியாரின் துரோகம் அத்தோடு நின்றதா? அடுத்த அடுத்த இதழில் பார்ப்போம்.

— வளரும்

## வெறியனே, வெளியே போ!

— முனைவர் சாலை இளந்திரையன்

நாம் இரண்டு பேரும்
ஒரே இடத்தில், அருகருகே
இலை போட்டு இனிதே அமர்ந்து
உணவு உண்பது நல்லது—
அதுவே நம் ஒற்றுமையைக் காட்டுவது,
நாம் உடன்பிறப்புகள் என்பதை உணர்த்துவது!

உனக்குப் பசி என்று சொல்லி, -
என் இலையில் வைப்பதையும்
நீயே அள்ளித் தின்பாயானால்,
என்னை இடித்துத் துரத்தித் தள்ளிவிட்டு
என் இலையையும்
உன் பக்கமே நீ இழுத்துக் கொள்வாயானால்,
நாம் இரண்டு பேரும்
உடன்பிறப்புக்கள் என்பது உண்மையா?
நம் குருதியோட்டத்தில்
ஏதோ முரண்பாடு
பெரிதாக இருக்கிறது, தெரியவில்லையா?
இது தெரிந்த பிறகும்,
தனித்தனிச் சாப்பாட்டு அறைகள்
நாம் வைத்துக் கொள்ளவில்லை என்றால்
நீ மட்டுமா மூடன்?—
நானுமல்லவா அசல் மூடன்!

மூடனாகமுடிந்திட விரும்பாமல்,—
'என் சாப்பாட்டு அறையில்
உன் இலையைப் போடாதே' என்கிறேன்;
இது பிரிவினை வாதமா?—
எந்த அறிவிலி சொன்னான்?
இணைந்தே இருப்பதை
அகற்றி வைப்பது பிரிவினை;
இணையவே முடியாதவைகளைத்
தனித்தனியே வைப்பது தேசியம்;
அதுவே சீரிய விடுதலை வாழ்நெறி!
புரிந்ததா?—
உனக்குப் புரிந்ததோ இல்லையா,—
வேண்டாம் சங்காத்தம;
எடு இலையை,—ஓடு என் வீட்டை விட்டு!

www.tamilarangam.net



# இந்திய அரசையே ஏமாற்றிய ஜெயவர்த்தன!

## இவனுடன் இனியும் என்ன பேச்சு? புலிகளின் துப்பாக்கி இனிப் பேசட்டும்!

அண்மையில் தமிழ்ஈழ நாட்டின் மீது ஆக்கிரப்பு ஆட்சி நடத்தும் சிங்கள பௌத்த நவகாணித்துவ பிற்போக்குவாத சிறீலங்கா ஆட்சியின் தலைவர் யூனியஸ் றிச்சேர்ட் ஜெயவர்த்தன புதுடெல்லிக்கு மூன்று நாள் சுற்றுப் பயணம் வந்திருந்தார்.

ஏற்கெனவே அமெரிக்காவின் எடுபிடி நாடான தென் கொரியாவுக்கும் இந்தியாவின் விரோதி நாடான சீனுவுக்கும், பின்னர் வாஷிங்டனுக்கும், லண்டனுக்கும் சென்று விட்டு டெல்லி வந்திருந்தார் ஜெயவர்த்தன.

இவர் அமெரிக்காவுக்குச் சென்ற போது, அங்குள்ள ஈழத் தேசியவாதிகள் அமெரிக்காவின் பிரபல ஏடுகளில் எல்லாம் ''கொலைகாரன் ஜெயவர்த்தன வருகிறன்'' என்று பெரிய அளவில் முழுப்பக்க விளம்பரங்களைச் செய்திருந்தனர்.

தமிழர்களின் கடுமையான எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் காரணமாக றீகனின் வெள்ளை மாளிகைக்குள் பின் கதவு வழியாகவே ஜெயவர்த்தனவினல் நுழைய முடிந்தது

இவற்றையெல்லாம் கண்டு ஆத்திரமடைந்த ஜெயவர்த்தன ''தமிழீழ விடுதலைக்குத் தமிழர்கள் போராடினல், மறுபடியும் ஆயிரமாயிரம் யூலைக் கலவரங்களைத் தூண்டிவிடுவேன்'' என்று தமக்கேயுரிய சிங்கள வெறியுடன் பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுத்தான்.

லண்டனிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் தமிழர்களிடமிருந்து விடுதலைவாதிகளுக்கு ஆயுதம் வாங்குவதற்குப் பணம் போகிறதே —இதைத் தடுக்க வேண்டாமா என்று அங்கலாய்த்தான்.

தாம் சென்ற விடமெங்கும் தம்மையறியாமலே ஈழத் தமிழர் பிரச்சினை பற்றியே பேசியதன் மூலம், அதை ஒரு சர்வதேசப் பிரச்சினையாக்கினன் ஜெயவர்த்தன.


புதுடெல்லியில் ஜெயவர்த்தனவும், இந்தியப் பிரதமரும் இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றியே பேசப் போவதாக இலங்கை, இந்திய வானொலிகள் அனைத்தும் அலறின.

ஆனல் இறுதியில் ஜெயவர்த்தன தனது சின்னத்தனத்தைக் காட்டிவிட்டான்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை இலங்கையின் உள்நாட்டு விஷயம் என்றும், அதில் தலையிட இந்தியாவுக்கு உரிமை கிடையாதென்றும் இந்தியாவின் முகத்தில் அறைந்தது போல இந்திய மண்ணில் நின்றே ஆர்ப்பரித்தான்.

அது மட்டுமல்ல—

சர்வதேசப் பயங்கரவாதிகளான இஸ்ரேலிய ''மொசாட்'' படையை இறக்குமதி செய்வதும் பிரிட்டிஷ் கூலிப்படைகளை இறக்குமதி செய்வதும் இலங்கையின் உள்நாட்டு விவகாரம் என்றான்.



கொலைவெறி ஜெயவர்த்தன

கடந்த 36 ஆண்டுகளாக ஜெயவர்த்தன உட்பட எத்தனையோ சிங்களத் தலைவர்களை நம்பிக் கெட்டவர்கள் ஈழத் தமிழர்கள். தந்தை செல்வாவுடன் உடன்படிக்கை எழுதிக் கையெழுத்திட்டு, அந்தக் கையெழுத்து மை உலர முன்னரே குத்துக்கரணம் அடித்து உடன்படிக்கையை கிழித்தெறிந்தவர்கள் சிங்களத் தலைவர்கள்.

சிங்களத் தலைவர்களிலேயே ஆகப் பெரிய குள்ள நரி—தமிழின விரோதி—வெறியன் ஜெயவர்த்தன.

அப்படிப் பட்டவன், 1983 நவம்பரில் ஈழத்தமிழ் மாநிலத்துக்கு ''மாநில சுய ஆட்சி'' வழங்குவதாக இந்திய மத்திய அரசுக்கு கொடுத்த வாக்குறுதியை இப்போது மீறியிருப்பது எமக்கு ஆச்சரியத்தை அளிக்கவில்லை.

ஆனல் 30 ஆண்டுகளுக்கு மேலாக ஜெயவர்த்தனவின் குள்ள நரிப் போக்கையும், தமிழின விரோதத்தையும் நன்கு படித்திருந்தும், வெலிக்கடைச் சிறையிலும், வெளியிலும் கொல்லப்பட்ட பல ஆயிரக்கணக்கான தமிழர்களின் பிணங்களின் மீது ஏறியுட்கார்ந்து கொண்டு ஜெயவர்த்தனவுடன் வட்ட மேசையில் பேசச் சென்றீர்களே, அமிர்தலிங்கம் கூட்டத்தினர்—அவர்களே தமிழ் இனத்தின் துரோகிகள்.

இந்திய அரசு பேச்சவார்த்தைக்கு போகும்படி கூறிய தால் போனேம் என்கிறீர்கள். பேச்சு வார்த்தையால் இதற்கு முன் தாம் பட்ட அனுபவங்களை எடுத்துக் கூறி இந்திய அரசை உங்கள் பக்கம் ஈர்க்க உங்களால் முடியவில்லையே! நீங்களும் தலைவர்களா?

வட்ட மேசைக்குப் போகத்தான் செய்தீர்கள்—ஆகக் குறைந்த பட்சக் கோரிக்கையாக ஒரு சமஷ்டி அரசியலமைப்பையாவது முன் வைத்திருக்கக் கூடாதா?

1947ஆம் ஆண்டிலிருந்து தமிழ் மக்களால் ஒட்டு மொத்தமாக நிராகரிக்கப்பட்டுள்ள சிங்கள ஒற்றையாட்சியின் கீழ் பிச்சை பெறவா பேச்சு வார்த்தைக்கு போனீர்கள்?

இன்னும் சமரசம் பேசப் போவதாகக் கூறுகிறீர்களே! ஒரேயடியாகச் சரணுகதி அடையப் போகிறீர்களா?

மொசாட் படைகளும், பிரிட்டிஷ் கூலிப் படைகளும் சிங்களப் படைகளுடன் சேர்ந்து தமிழ் மக்களைக் கொன்று குவிக்கும் போது இனியும் என்ன பேச்சு?

ஜெயவர்த்தனவுக்கு புரிந்து கொள்ளக் கூடிய மொழியில் — துப்பாக்கி மொழியில்—பீரங்கி நடையில்—வெடிகுண்டு முறையில் இனிப் பேசக் கூடியவர்கள் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள்தாம்.

கூட்டணித் துரோகிகளே! தமிழ் ஈழ அரசியலில் இருந்து இத்தோடு ஒதுங்கி விடுங்கள்!

---

### 18 நாடுகளில் 3847 பேரை படுகொலை செய்தவர்கள்

# 'மொசாத்' பயங்கரவாதிகளின் வரலாறு!

இஸ்ரேலிய 'மொஸாத்' என்பது தான் என்ன?

1950-ம் ஆண்டுத் தொடக்கத்தில் அரசியல் உளவு வேலைக்கும், பயங்கரவாதத்திற்குமானதொரு கருவியாக இந்த 'மொஸாத்' ஸ்தாபனம் அமைக்கப்பட்டது.

1948-ல் பாலஸ்தீன கிராமங்களிலும்' 1953-ல் லிபியாவிலும் புகுந்து சூறையாடி மக்களைக் கொன்று குவித்த ஈவிரக்கமற்ற அரக்கர் கூட்டம் தான் 'மொஸாத்'தின் முன்னேடி.

அயல் நாடுகளில் ஆட்சிக் கவிழ்ப்பு, வன்முறை, தனிநபர் பயங்கரவாதம் ஆகியவற்றின் மூலம்' இஸ்ரேலிய நலன்களை விஸ்தரிக்கும் நோக்குடனேயே 'மொஸாத்' நிறுவப்பட்டது என்று யூத உளவு ஸ்தாபனத்தின் முதலாவது அதிபரான இஸார் ஹாரல் என்பவர் தனது நினைவுக் குறிப்புக்களில் எழுதியுள்ளார்.

'மொஸாத்' ஸ்தாபனத்தின் தலைவர், இஸ்ரேலியப் [illegible] டுமே பதில் சொல்லக் கடமைபட்டவர். 'மொஸாத்' கொலை பாதகர்கள் பற்பல வழிகளில், அபார திறமையுடன் ஆட்களை தீர்த்துக் கட்டக் கூடியவர்கள். புற்றுநோயினலோ' அல்லது மாரடைப்பினலோ, அல்லதுதெரு விபத்தினலோ ஒருவர் இறந்து விட்டதாகப் பிறர் கருதும் வண்ணம் காரியத்தைக் கச்சிதமாக முடிக்கும் திறமை கொண்டவர்கள் அவர்கள்.

பற்பல பிற்போக்கு தேசிய ஸ்தாபனங்களின் ஆதரவுடன் பல நாடுகளிலும் 'மொஸாத்' தமது பயங்கர நடவடிக்கைகளை விஸ்தரித்துள்ளது.

1972, செப்டம்பர் 8-ல் பாரிசில் பாலஸ்தீன விடுதலை இயக்கப் பிரதிநிதியான மஹ்மது எல் ஹம்ச்சாரி கொல்லப்பட்டார். அவரது டெலிபோனுக்கு அடியில் வைக்கப்பட்டிருந்தரேடியோக் கட்டுப்பாட்டு குண்டு வெடித்தது.

அதே ஆண்டு அக்டோபர். திரிபோலியில் கடிதத்தினுள் வைத்து அனுப்பப்பட்ட [illegible] பாலஸ்தீன அலுவலகச் செயலாளர் தனது கண்களிரண்டையும் இழந்தார்.

1973, பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர்களில் ஒருவரான அபுயூசுப் என்பவரும், அவரது மனைவியும் கொலையுண்டனர். சில தினங்களுக்குப் பின்னர் பாரிஸ் நகரில், ஒரு ஹோட்டலில் இருந்து வெளிவரும்போது, பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவரான டாக்டர் பாஸில் அல்கான்பாசி கொலை செய்யப்பட்டார்.

இப்படிக் கொலையானவர்களின் பட்டியல் மிகநீளமானது. யூசுப் எல்நாதியார் கமால் அத்வரன், பெய்ரூட்டில் கொலையுண்டார். பாலஸ்தீனத் தலைவரான (பிஎல்ஓ) கமால் உசேனும், லெபனன் பத்திரிகையாள நாசர் மேட்டரும் இத்தாலியில் படுகொலை செய்யப்பட்டனர். பிஎல்ஓ உதவித் தலைவரான ஃபாதல்அல்தானி பாரிசில் வீழ்த்தப்பட்டார்.

'பிஎல்ஓ' அணியைச் சேர்ந்தோர் தான் இவ்வாறு [illegible] இல்லை; மூன்ருவது நாடுகளில் வசித்துக் கொண்டிருந்த அரபு நாடுகளைச் சேர்ந்த பல தனிப்பட்டவர்களும், 'மொஸாத்'த்தின் கொலை வெறிக்கு ஆளாகியுள்ளனர்.

இத்தகைய கொலைகளைத் தவிர வெளிநாடுகளில் குழிபறிப்பு வேலைகளையும் பெரும் அளவிலான பயங்கர நடவடிக்கைகளையும் கூட 'மொஸாத்' நடத்தி வருகிறது.

1968 நவம்பரில், 200 டன் யுரேனியத்தை ஏற்றிக் கொண்டு ஆன்ட்வெர்ப்பில் இருந்து, ஜெனேவாவுக்குப் பயணம் செய்து கொண்டு இருந்த கப்பல் நடுக்கடலில் மர்மமான முறையில் மறைந்து விட்டது. பின்னர் அது இஸ்ரேலியத் துறைமுக ஒன்றில் தோன்றிற்று. இந்த மாயாஜாலத்தை செய்தது 'மொஸாத், குழுவினர்தான்.

1976-ல் அன்னிய நாட்டு சீருடைகளை அணிந்து கொண்டு, பல ஆப்பிரிக்க நாடுகளது வானவெளியிலும் அத்துமீறிப் பறந்து, 'மொஸாத் அதிரடிப் படையினர், உகாண்டா நாட்டின் விமான தளத்தில் இறங்கினர். அவர்களது துப்பாக்கிச் சூட்டிற்கு பலர் பலியாயினர். இன்னும் பலர் காயமடைந்தனர்.

'மொஸாத்'திற்கும், அமெரிக்க சி. ஐ. ஏ. க்கும் இடையே காணப்படும் ஒருங்கிணைவு மிகப் பெரும் அபாயத்தைத் தோற்றுவிக்கிறது.

சி. ஐ. ஏ-யின் ஆணைகளின் படி 'மொஸாத்' ஏஜெண்டுகள், வளரும் நாடுகளில் ஆட்சிக் கவிழ்ப்பிலும், பிற்போக்கு அரசுகளுக்கு முட்டுக் கொடுப்பதிலும், சில நாடுகளின் அரசாங்க எதிர்ப்பு ஸ்தாபனங்களுக்கு ஆயுதங்களை வழங்குவதிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆப்கானிஸ்தான் கலகக்காரர்களுக்கு 'மொஸாத்'தும் சி. ஐ. ஏ-யும் ஆயுத உதவி செய்கின்றன. பஞ்சாபில் தற்போது தடை செய்யப்பட்டுள்ள தால்காசா, ஸ்தாபனத்திற்கு நிதியுதவி அளித்தன. எல்சால்வடார், கௌதமாலா, ஹோண்டு

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## எண்ணம்

# தமிழீழ விடுதலையை விரைவுபடுத்த வழியென்ன?

தமிழ் ஈழ நாட்டு மக்கள் இன்று வரலாறு காணாத நெருக்கடிகளையும், துன்பங்களையும் துயரங்களையும் சந்தித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

கண்ணீர், இரத்தம், சிறை சித்திரவதை, சாக்காடு, இவைகள் தமிழ் ஈழ மக்களின் அன்றாட நிகழ்வுகளாகி விட்டன.

சிறிலங்கா நாட்டு ஆக்கிரமிப்புப் படைகள், தமிழ் ஈழ மக்களை நாயினும் கீழாக அவமதித்து, அடக்கியாள தன் முழு சக்தியையும் பிரயோகித்து வருகின்றன.

யூதர்கள் ஒரு காலத்தில் இட்லரின் கீழ் எத்தனை துன்பங்களை அனுபவித்தார்களோ—பாலஸ்தீனியர்கள் சியோனிசச் சர்வாதிகாரக் கொலைவெறியரால் இன்று எவ்வளவு வேதனைக் கண்ணீர் வடிக்கிறார்களோ—அதே நிலையிலேயே ஈழத்தமிழ் மக்களும் இன்று இன்னலுறுகின்றனர்.

யூதர்கள் துன்புறுத்தப்பட்ட போது அவர்களுக்கென்று ஒரு சொந்த நாடு இருக்கவில்லை—இன்று பாலஸ்தீனியர்களும் தமது நாட்டைப் பறி கொடுத்துவிட்டு நட்பு நாடுகளிலே தங்கி இருந்து கொண்டுதான் தம் தாயகத்தை மீட்கப் போராடுகிறார்கள்.

ஆனால ஈழத் தமிழர்களோ பலவந்த சிங்களக் குடியேற்றத்தினால், தமது தமிழ் ஈழ நாட்டின் சில பகுதிகளை இழந்தாலும், முழு நாட்டையும் இழந்து விடவில்லை. தமது மண்ணிலிருந்து கொண்டே ஆக்கிரமிப்புப் படைகளை எதிர்த்துப் போராடுகிறார்கள்.

தமிழ் ஈழ நாட்டை ஆக்கிரமித்துள்ள சிறிலங்காவின் சிங்கள நவகாலனித்துவப் படைகளைத் தமிழ் ஈழ மண்ணில் இருந்து ஓடோட விரட்டியடித்து, தமது மண்ணில் தமது சுதந்திரக் கொடியைப் பறக்க விடவே தமிழர்கள் போராடுகிறார்கள்.

தமிழ் ஈழ நாட்டின் சுதந்திரத்தையும், இறையாண்மையும் மீட்டு,—ஒரு சோசலிசத் தமிழ்ஈழ அரசை அங்கு உருவாக்குவதே அனைத்துத் தமிழர்களின் ஒரேயொரு சிந்தனையும் செயலுமாகும்.

இத்தமிழ் ஈழநாடு, இந்தியத் துணைக்கண்டத்தின் உற்ற நண்பனாகவும். இந்திய அரசின் வெளிநாட்டுக் கொள்கைகளுக்கு அமைவானதாகவும், இந்தியத் துணைக்கண்டத்தின் தென்முனைப் பாதுகாப்புக்கு ஒரு அரணாகவும் விளங்கும்.

தமிழ் ஈழத்தில் சிங்களப் பாதுகாப்புப் படைகள் கட்டவிழ்த்து விட்டுள்ள அரச பயங்கரவாதத்திற்கு அஞ்சி, ஈழத்தமிழர்கள் பூமிப்பந்திலுள்ள அனைத்து நாடுகளுக்கும் அகதிகளாக ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு தப்பி ஓடுவது பிரச்னையின் நிரந்தரத் தீர்வுக்கு ஒருபோதும் வழிவகுக்கப் போவதில்லை. எந்தப் பிரச்னைக்கும் அஞ்சாது தமிழ் ஈழத்திலேயே தங்கியிருந்து அவற்றை எதிர்த்துப் போராடத் தயாராக இருப்பவர்களே நமது போற்றுதலுக்கு உரியவர்கள்; நமது வணக்கத்துக்கு உரியவர்கள்.

சிங்கள இனவாத ஏகாதிபத்தியப் படைகளை எதிர்த்துத் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் நடத்திவரும் அதிரடித் தாக்குதல்களும் — தாயகவிடுதலைப் போரில் தமிழ் ஈழ மக்கள் விடுதலைப் போராளிகளுடன் இணைந்து நிற்பதும், சிங்கள அரசைக் கதிகலங்க அடித்துள்ளன.

தமது சிங்களப் படைகளின் கையாலாகாத்தனத்தை உணர்ந்தே, அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கென சர்வதேசப் பயங்கரவாதிகளான 'மொசாட்' கொலைகாரர்களையும், எஸ். ஏ. எஸ். கூலிப்படைகளையும், சீன விமானிகளையும், கொலைவெறியன் ஜெயவர்த்தன இறக்குமதி செய்திருக்கிறான்.

சுதந்திர வேட்கைகொண்டு, எத்தகைய தியாகத்துக்கும் தயாராகிக் களத்தில் குதித்துள்ள மக்களை எந்த வல்லரசும் வீழ்த்திவிட முடியாதென்பதற்கு வியட்நாம் மக்கள் இருபதாண்டு காலம் நடத்திய வீரப்போராட்டம் கட்டியம் கூறிக் கொண்டிருக்கிறது.

விடுதலை கோரும் தமிழ் ஈழ மக்களை விடுதலை பொன்றே திருப்தி செய்ய முடியுமே தவிர சிங்கள ஏகாதிபத்தியம் போடும் வேறு எந்தப் பிச்சையும் திருப்தி செய்ய முடியாது. பேச்சுவார்த்தை அரசியல் நடத்தும் பதவிப் பித்தர்களுக்கு இனி தமிழ் ஈழ மண்ணிலே இடமில்லை.

தமிழ் ஈழ மண் பெற்றெடுத்த வீரத் திருமகன் தமிழ் ஈழத்தின் தேசிய தலைவர் திரு. பிரபாகரன் தலைமையில் இயங்கும் தமிழ் ஈழ விடுதலைப் படைகள்தாம் சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு இன்று மிகப்பெரிய சவாலாக அமைந்துள்ளன. கட்டுப்பாடும், நேர்மையும், சத்தியமும், ஒழுக்கமும், நிறைந்த ஒரே அமைப்பாக திரு. பிரபாகரன் தம்முடைய விடுதலைப்படையை அமைத்திருக்கிறார்.

பூமிப்பந்தின் பல்வேறு நாடுகளிலுமுள்ள வசதிபடைத்த தமிழர்கள், தமிழர் இயக்கங்கள், தமது நிதிஉதவி அனைத்தையும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கே அளிக்க முன்வர வேண்டும்.

பாலஸ்தீன விடுதலை இயக்கங்கள் பத்து அமைப்புக்களாகப் பிரிந்திருந்தும், பின் அவை அனைத்தும் யாசீர் அரபாத்தின் தலைமையை ஏற்று ஒன்றுபட்டன. அதுபோலவே

தமிழ் ஈழ விடுதலையை உண்மையில் நேசிக்கும் சகல சக்திகளும் இயக்கங்களும் பிரபாகரன் எனும் வீர வேங்கையின் தலைமையில் இணைய வேண்டும். பிரபாகரன் குரல் ஒன்றே தமிழினத்தின் ஒன்றுபட்ட ஒரே குரலாக மாறவேண்டும்.

அந்த நிலையை ஏற்படுத்தி தமிழ் ஈழ விடுதலையை விரைவில் வென்றெடுக்க 'வீரவேங்கை' தன் பங்கை முழுமையாக நிறைவேற்றும் என்ற உறுதியை தமிழ்மக்களுக்கு எமது முதலாவது இதழிலேயே தரும் அதேசமயம், தமிழ் ஈழ விடுதலைக்கு விசுவாசமாக யார் உழைத்தாலும், அவர்களுக்கும் 'வீரவேங்கை' பக்கபலமாக இருக்கும் என்றும் கூறி வைத்த விரும்புகிறோம்.

# அஹிம்சைப் போராட்டமும் அமிரின் புஸ்வாணமும்

**தமிழர் விடுதலைக் கூட்டணி என்று முன்பு அழைக்கப்பட்ட அமிர்தலிங்கம் சிவ சிதம்பரம் கம்பெனியார் இப்பொழுது ஒரு புதிய ஸ்டண்ட் ஒன்றை அடித்து வருகிறார்கள்.**

இதோ வருகிறது அகிம்சைப் போராட்டம், சட்ட மறுப்பு போராட்டம் ஆரம்பமாகப் போகிறது என்றெல்லாம், அடிக்கடி தமிழ்நாட்டுப் பத்திரிகைகளிலே அறிக்கை விடுத்துக் கொண்டிருக்கிறார்.

இவர்களுக்கும் ஏதோ தமிழீழத்தில் இன்னும் அடித்தளம் உண்டு, ஆதரவு உண்டு, அமைப்பு உண்டு, என்று தவறுதலாக நம்பிக் கொண்டிருக்கும் இங்குள்ள தமிழ், ஆங்கில ஏடுகள், அவற்றைப் பெரிது படுத்தி செய்தி வெளியிட்டுக்கொண்டிருக்கின்றன.

அமிர்தலிங்கம் அதிலும் ஒரு பல்டி அடித்திருக்கிறார். இப்போது நடைபெறுகிற வட்ட மேசை மாநாடு தோல்வியடைந்தால் மட்டுமே தமது கட்சி அஹிம்சைப் போராட்டத்தை ஆரம்பிக்குமாம்.

அதாவது வட்டமேசை மாநாடு இன்னும் நடைபெறும், அதில் ஏதாவது எலும்புத் துண்டு கிடைக்கும் என்கிற நப்பாசை அமிர்தலிங்கத்தை இன்னும் விட்டுப் போனபாடில்லை.

வட்ட மேசை மாநாடு கால வரையறையின்றி ஒத்திப் போடப்பட்டு விட்டது.

தமிழீழ விடுதலைக்குப் போராடும் சக்திகளை ஒழித்துக் கட்டும் நடவடிக்கையில் ஜெயவர்த்தன முழு மூச்சுடன் ஈடுபட்டுள்ளார்.

இஸ்ரேலியப் பயங்கரவாதிகளான "மொசாத்" கொலைகாரர்கள் தமிழீழத்தில் தமது நடவடிக்கையை ஆரம்பித்து விட்டனர்.

பிரிட்டிஷ் கூலிப்படைகள் சிங்கள இராணுவத்துக்கு கொரில்லா முறியடிப்புப் போராட்டத்தில் பயிற்சியளித்து வருகின்றனர்.

18 கோடி ரூபா செலவில் கண்காணிப்பு வலயத்துக்கென மூன்று புதிய கப்பல்களை சிறிலங்கா அரசு வாங்குகிறது.

சிங்களச் சிறைகளிலும், இராணுவ முகாம்களிலும் 500க்கு மேற்பட்ட தமிழர்கள் நாளாந்தம் செத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் இனியும் பேச்சு வார்த்தை என்ற நூலிழையில் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கலாம் என்று அமிர்தலிங்கம் சிந்திப்பது நமக்கு ஆச்சரியத்தை அளிக்கவில்லை.

ஏனெனில் அவருக்கு அதை விட்டால் வேறு கதியே இல்லை!

ஜெயவர்த்தனவுடன் சண்டை பிடிப்பது போல வெளிக்கு காட்டிக் கொண்டாலும், ஜெயவர்த்தனவுக்கும் அமிர்தலிங்கத்திற்குமிடையேயுள்ள பழைய (1965 ஆம் ஆண்டின்) கணவன்—மனைவி உறவு விட்டுப் போகவில்லை.

இலங்கை முழுவதும் ஒரே நாடென்பதையும், சிங்கள ஒற்றையாட்சியையும் ஏற்றுக் கொண்டு, அதன் கீழ் ஒரு தீர்வு காணத்தானே பேச்சு வார்த்தையே நடைபெறுகிறது?

அதை ஏற்றுக் கொண்டு பேச்சுவார்த்தை நடத்தும் அமிர்தலிங்கம் தமிழ்நாட்டில் கரூரில் நின்று சுதந்திரத் தமிழீழம் அடையும் வரை போராடுவோம் என்று வெற்று வேட்டு முழக்கம் எழுப்புவது யாரை ஏமாற்றுவதற்கு?

இந்திராகாந்தியும் இந்திய அரசும் வற்புறுத்தியதாலே தான் பேசப்போனேம் என்று கூறித்திரிகிறார் திரு அமிர்தலிங்கம்.

ஆனால் இந்திய அரசு என்ன சொல்கிறது?

நாமாக எந்த ஒரு தீர்வையும் திணிக்கவில்லை — அமிர்தலிங்கத்துடனும் ஜெயவர்த்தனவுடனும் திரு. ஜி. பார்த்தசாரதி பேசியதால் இருவர் கருத்தையும் ஒட்டி எழுந்ததே சமரசத்திட்டம், இதில் இந்தியாவின் தலையீடு அணுவளவும் கிடையாது என்கிறது இந்திய அரசு.

அப்படி உருவான "மாநில சுயாட்சி" என்ற திட்டத்தையும் ஜெயவர்த்தன குப்பைத் தொட்டிக்குள் போட்டு விட்டான். இந்நிலையில், பழைய குருடி கதவைத் திறடி என்று 1983 யூலை 20-ல் ஜெயவர்த்தனவுடன் அமிர்தலிங்கம் பேசவிருந்த மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கு கூடுதல் அதிகாரம்" என்ற மாய் மாலத் திட்டம் பற்றியா அமிர் மீண்டும் பேசப் போகிறார்?

அஹிம்சைப் போராட்டம் நடத்தப் போவதாக கூறுகிறார். அது எப்படிப்பட்டதாக இருக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும்.

ஏதாவது கோவிலிலே உண்ணாவிரதம் இருப்பார்கள், மங்கையர்க்கரசிபாட்டுப் பாடுவார்; மாலை பழரசத்துடன் போராட்டம் முடிவடையும்.

இப்படிப்பட்ட போராட்டத்தை கடந்த முப்பது ஆண்டுகளில் 30,000 தடவை நடத்தியிருப்பார்கள். இதனால் சிங்கள அரசுக்கு என்ன கஷ்டம்?

இன்றைக்கு அமிர்தலிங்கம் காத்திரமான போராட்டம் எதையும் தமிழீழத்தில் நடத்துவதாக இருந்தால், அது பிரிவினைத் தடைச்சட்டத்தை மீறும் போராட்டமாகவே இருக்க முடியும்.

சிறீலங்கா அரசியலமைப்பின் ஆறாவது அரசியல் அமைப்புத்திருத்தத்தைப் பகிரங்கமாகத் தீயிட வேண்டும்; தமிழீழ சுதந்திரத்தைத்

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழ விடுதலைக்கு உயிரீந்த வீரர்களின் கல்லறைக்கு

# கண்ணீர் அஞ்சலி!

## சிங்கள வெறிநாய்களை விரட்ட விடுதலைப் புலிகளாக மாறுவோம்!

வெள்ளைய ராட்சியகன்று, சிங்களக் கொள்ளையர் ஆட்சி தமிழீழத்தில் புகுத்தப்பட்ட பின்னர் கடந்த 36 ஆண்டு காலத்தில், சிங்கள ஆட்சியினுல் தமிழ்பேசும் மக்களது, குடியுரிமை, வாக்குரிமை, நில உரிமை, மொழியுரிமை, தொழிலுரிமை, கல்விஉரிமை ஆகிய அனைத்து உரிமைகளும் பறிக்கப்பட்டு, அடிமைகளாக அடக்கியொடுக்கப்பட்ட இனமாகத் தமிழ் தேசிய இனம் நடத்தப்பட்டு வருவது உலக மறிந்த உண்மை.

தமிழர்களையும், தமிழ் பேசும் மக்களாகிய இஸ்லாமியர்களையும் அழித்தொழித்து தமிழீழ நாட்டையும் சிங்கள பௌத்த நாடாக்குவதே சகல சிங்களவர்களினதும் ஒரே நோக்கமாகும். இதன்மூலமே "ஒருமைப் பாட்டை" உருவாக்க சிங்களவர்கள் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றனர்.

### இனக்கொலை

1956ஆம் ஆண்டு முதல் இந்த இனக்கொலைத் திட்டத்தைப் புரிந்துகொண்ட ஈழத் தமிழர்கள் இதை எதிர்த்து அறவழியிலும் மறவழியிலும் போராடி வருகின்றனர். இதனுல் 1956ஆம் ஆண்டு முதல் தமிழர்களை உடல் ரீதியாகவே கொன்றொழிக்கும் திட்டத்தை (Physical Liquidation of Tamils) "இனக் கலவரம்" என்ற போர்வையுடன் கச்சிதமாக நடத்தி வருகின்றனர்.

1958, 1961, 1977, 1979, 1981, 1983ஆம் ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க பெருமளவிலான தமிழர் கொலை நடத்தப்பட்டது.

1977ஆம் ஆண்டுவரை, இனவெறி பிடித்த சிங்களவர்கள், தமிழர்களைக் கொன்றொழிப்பதும், சொத்துக்களை சூறையாடுவதும், தமிழ் பெண்களைக் கற்பழிப்பதுமான செயல்களில் ஈடுபட்டு வந்தனர்.

### 1979இல் நடந்த அட்டூழியம்

1977ஆம் ஆண்டு இனக் கொலைகாரன் ஜெயவர்த்தனு ஆட்சிக்கு வந்த பின்னர்தான் தமிழினப் படுகொலைகளில், அரசுப் படைகளே நேரடியாக ஈடுபடும் பயங்கர நிலைமை தோன்றியது. அரச பயங்கரவாதம் தமிழீழ நாட்டில் நிரந்தரமாக்கப்பட்டது.

1979ஆம் ஆண்டு நெருக்கடி நிலை பிரகடனப் படுத்தப்பட்டு யாழ் மாவட்டத்தில் ஆயிரம் தமிழ் இளைஞர்கள் வதை செய்யப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

1981ஆம் ஆண்டு தமிழர் கொலையுடன் தமிழர்களின் ஒப்பரிய நூலகமும் அரசுப் படைகளால் எரியூட்டப் பட்டன.

### 1983 மே திங்களில் ஆரம்பம்

1983இல் நடைபெற்ற தமிழினப் படுகொலைதான் எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்ததுபோல உச்சக்கட்ட நிலையை அடைந்தது.








1983 மே 18ஆம் நாள் யாழ்ப்பாணத்தில், தமிழர் வீடுகளுக்கும், கடைகளுக்கும் எரியூட்டியதுடன் சிங்கள இனவெறி அரசுப்படைகள் தமிழர் கொலையை ஆரம்பித்தன.

பின்னர், அது வவுனியா வரை சென்று, வவுனியா நகரமே சாம்பராக்கப் பட்டது.

1983 யூன் முதல் திகதியிலிருந்து திருகோணமலையில் தமிழர் படுகொலை விஸ்தரிக்கப்பட்டது. தமிழர் குடிசைகள், வீடுகள், ஆலயங்கள், பாடசாலைகள், கடைகள் அனைத்தும் எரியூட்டப் பட்டன. சிங்களத் தரைப் படை, விமானப்படை, கடற் படை, போலீஸ்படை, சிங்களக் குண்டர்கள்— அனைவரும் ஒன்றுபட்டு 50 தமிழர் குழந்தைகளையும் கொன்றொழித்தனர்.







இந்த அரச பயங்கரவாதத்தை எதிர்த்து, தமிழ் ஈழ விடுதலைப் புலிகளும் களத்தில் குதித்தனர். 1983 யூலை 23ல் யாழ் திருநெல்வேலியில் இராணுவ வண்டிக்கு வெடிகுண்டு வீசப் பட்டது. இத்தாக்குதலினுல் 13 சிங்கள இராணுவத்தினர் உடல் துண்டு துண்டாகச் சிதறியது. இப்போராட்டத்தின் போது விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவராகிய செல்லக்கிளி எனும் செல்வநாயகம் தன் உயிரையே அர்ப்பணித்தார்.

இச்சம்பவத்துக்கு ஒரு கிழமைக்கு முன் இனத் துரோகிகளால் காட்டிக் கொடுக்கப்பட்ட நிலையில், சூழ்ந்துவிட்ட சிங்கள இராணுவத்திடம் சரணடைய மறுத்து விடுதலைப் புலிகளின் தாக்குதல் படைத் தலைவர் சாள்ஸ் அன்ரனி சீலனும், ஆனந்தன் எனும் வீரனும் ஒருவரை ஒருவர் சுட்டுத் தம் உயிரை மாய்த்து புலி இயக்கத்தின் பெருமையைக் காத்தனர்.

### 53 தமிழர் படுகொலை

அஞ்சிக் கிடந்த சிங்களப் படையினர் மறுநாள் யாழ்ப்பாணத்தில் வீடுகளில் புகுந்து பூவும் பிஞ்சும், காயும் பழமுமாக 53 தமிழர்களைச் சுட்டு வீழ்த்தினர். அத்தனை பேருமே

1983 யூலை 25 முதல் கொழும்பிலிருந்து ஆரம்பித்து தமிழர்களைக் கண்ட கண்ட இடமெல்லாம் வெட்டியும் சுட்டும் கொலை செய்யும் மிருகத்தனம் தலைவிரித்தாடியாது தீவு முழுவதும்,

### சிறையில் படுகொலை

ஆம், யூலை 25ஆம் நாள் தான் ஸ்ரீலங்காவின் பிரதம இராணுவ கொமாண்டரும் பாதுகாப்பு அமைச்சருமான ஜெயவர்த்தனவினுலும் (அ) நீதியமைச்சினுலும் வெலிக் கடைச் சிறைச்சாலையில் சட்ட பூர்வமான தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழ் ஈழ விடுதலை மறவன் குட்டிமணி, தங்கத்துரை ஜெகன் உட்பட 35 தமிழ் அரசியல் கைதிகள் குரூரமாகப் படுகொலை செய்யப்பட்டனர். ஜெயவர்த்தனுவின் நேரடிக் கண்காணிப்பில் நடைபெற்றது இப்படுகொலை யென்பதில் சந்தேகமேயில்லை — புத்தனின் சிலையைத் தமிழனின் இரத்தத்தினுல் குளிப்பாட்டி அதைக் குடித்து மகிழ்ந்தனர் சிங்கள மிருகங்கள்.

சிறையில் இரண்டாவது தாக்குதல் யூலை 27ஆம் திகதி நடைபெற்றது. இந்த இரண்டாம் நாள் தாக்குதலின் போதுதான் காந்திய இயக்கச் செயலாளர் டாக்டர் இராசசுந்தரமும் இன்னும் 17 தமிழ் அரசியல் கைதிகளும் கோடரிகளாலும் வாள்களாலும் வெட்டி சாய்க்கப்பட்டனர்.

தமிழ்க் கன்னியர் கற்பழிக்கப்பட்டுக் கொலை செய்யப் பட்டனர்.

மணமான மங்கையர் கணவன் முன்னுலேயே கற்பழிக்கப்பட்டனர்.

ஆசிரியர்கள், மாணவர்கள் டாக்டர்கள், பொறியியலாளர் வணிகர்கள், ஆகியோர் சொத்துச் சூறையாடப் பட்டுக் கொலை செய்யப் பட்டனர்!

ஐயகோ! எங்கும் குருதி வெள்ளம்!

எங்கணும் தமிழர் பிண மலைகள்!

அகதி முகாம்களில் பல இலட்சம் பேர் அடைக்கலமாயினர்!

நாட்டை விட்டுத் தப்பியோடியோர் பல்லாயிரவர்!

நாதியற்ற இனமாக—நாடற்ற இனமாக நலிவுறுகிறது தமிழினம் தொடர்ந்து!

ஆம் 1983 இல் சிங்களவன் தொடங்கிய இன ஒழிப்பு இன்னும் ஓயவில்லை! ஒடுங்கவில்லை—மேலும் விரிவுபடுத்தப்பட்டுத் தொடர்கிறது! இஸ்ரேல் படைகளும், பிரிட்டிஷ் கூலிப்படைகளும் குவிக்கப்படுகின்றன.

வெறி கொண்ட சிங்களப் படைகளும் அதன் தலைவன் அத்துலத் முதலியும் தமிழனின் இரத்தத்தில் நீச்சலடிக்க நிற்கிறார்கள்.

1984 மே 28 இல் — சுன்னுகம், மல்லாகத்தில் அப்பாவித் தமிழர்கள் 100 பேர் காரணமின்றிச் சுட்டுக்கொல்லப் பட்டனர்!

1984 ஏப்ரல் 9, 10, 11, 12 ஆம் நாட்களில் 250 தமிழர்கள் யாழ்ப்பாணத்தில் நாய்களைப் போன்று சுட்டுத் தள்ளப்பட்டனர்.

இதைவிட, சிறைகளிலே சுட்டுக் கொல்லப்படுவோர், கண்காணிப்பு வலயத்திலே காணுமல் போவோரின் கணக்கே தெரியவில்லை.

தமிழ் ஈழ விடுதலைக்காக உயிரீந்த உத்தமத் தியாக வீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தி அவர்களின் கல்லறைகளிலே நின்று உறுதி ஏற்போம்!

வாழ்ந்தால் விடுதலைபெற்ற நாட்டில் சுதந்திர மனிதர்களாக வாழ்வோம் — அன்றேல் விடுதலைக்குப் போராடி அதிலேயே அழிவோம்!

ஒவ்வொரு ஈழத் தமிழனும் துப்பாக்கி ஏந்துவோம்!

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குளிரூட்டும் அறைகளில் நடத்தும் மாநாடுகளினுல்

# விடுதலை கிடைக்காது!

## குருதிச் சேற்றில் போராடும் தமிழனுக்குக் கொடுக்கப்பட வேண்டியது ஆயுதங்களே

சின்னஞ் சிறிய இலங்கைத் தீவில்செந்நீர் சிந்தும் தமிழர் நிலை நியூயார்க் நகரத்தில் மாநாடுபோட்டு விவாதிக்கப் பட்டிருப்பதை எண்ணி மகிழ்வதா, குழம்புவதா என்றே புரியவில்லை.

அந்த மாநாட்டில் தமிழ் ஈழக் கொடி ஏற்றப்பட்டிருக் கிறது.

டாக்டர் பஞ்சாட்சரம் அந்தக் கொடியை ஏற்றி வைத்திருக்கிருர்.

அவரை ஓரளவு நான் பழகி அறிந்திருக்கிறேன்.

இலங்கையில் வாழ முடி யாத நிலையில் அமெரிக்காவில் குடியேறிய யாழ்ப்பாணத் தமிழர்களில் சிலர் மிக உயர்ந்த வாழ்வில் திளைக் கின்றனர்.

அண்மையில் ஈழத் தீவில் ரத்த ஆறு ஓடிய போது வெளிநாடுகளில் வாழும் யாழ்ப்பாணத் தமிழர்கள் சென்னைக்கு வந்து, டெல்லிக் குச் சென்று இந்திரா காந்தி உட்பட எல்லாத் தலைவர் களையும் சந்தித்தனர்.

தொடர்ந்து இங்கே தங்கி இந்த இன்னலுக்கு ஒரு இறுதித் தீர்வு காணவேண் டும் என நான் டாக்டர் நித்தியானந்தம் போன்றவர் களைக் கேட்டுக்கொண்டேன்.

ஆனல் அவர்களுக்கு அவகாசமில்லை.

தத்தம் குடியேற்ற நாடு களில் ஏராளமான வருவாய் தரும் தொழில்களில் ஈடுபட் டிருக்கும் அவர்கள் துக்கம் விசாரிக்க வந்தவர்களைப் போலத் திரும்பி விட்டார் கள்.

இப்போது நியூயார்க் நகரில் இவர்கள் நடத்துவது இரண்டாவது மாநாடு.

இந்த மாநாட்டிற்கான செலவு தனிஈழம் அமையு மானல் அந்த சுதந்திர நாட்டின் ஓராண்டு வரவு—செலவு (பட்ஜெட்) அளவுக்கு அமையக் கூடும்.

ஈழத்தில்—ரண களத்தில் போராடும் தனி வீரர்களுக்கு இந்த மாநாட்டினல் என்ன நன்மை?

எதுவுமே இல்லை!

அரைகுறையான ஆயுதங் களுடன் யாழ்ப்பாணத்தில் ஜீவ மரணப் போராட்டம் நடத்தும் விடுதலை வீரர்கள் இந்த ஆடம்பர மாநாட்டை பற்றி கேட்டால் எரிச்சல் கலந்த பெருமூச்சு விடுவார் களே தவிர, புதிய உற்சாகம் பெறமாட்டார்கள்.

**கோல்டா மேயரின் பணி**

இஸ்ரேல் நாடு உருவான நேரத்தில் திருமதி கோல்டா மேயர் அமெரிக்கா சென்ருர்.

அங்குள்ள யூதர்களை—வசதி படைத்த சீமான்களைச் சந்தித்து இஸ்ரேல் அமைய வேண்டிய சரித்திரக் கட்டா யத்தை விளக்கி, சிறுகச் சிறுக நன்கொடைகளைச் சேகரித்தார்.

நன்கொடையாகச் சேர்த்த பணத்தில் தன் சொந்தச் செலவுக்குக் கூட எடுத்துக் கொள்ளவில்லை.

**விருதுநகர் சீனிவாசன்**

ஓட்டல்களில் பகுதி நேர ஊழியம் செய்தார்.

அங்கு நடைபெற்ற பெரிய விருந்துகளில் மிகுந்த உணவைச் சேமித்து வைத்து உண்டார்.

இவ்வளவு எளிமையாக தன் நாட்டு விடுதலைக்காக நன்கொடை திரட்டிய திருமதி கோல்டா மேயர் சோவியத் ரஷ்யாவில் கோரடீசுவரனின் புதல்வி யாகப் பிறந்து வளர்ந்தவர்.

புனித ஜெருசலேமை நோக் கிப் புறப்பட்ட போது தன் பூர்வீகச் சொத்துக்கள் அத்தனையையும் இழந்து விட்டு சுதந்திர வேட்கை யோடு வந்தவர்.

பிற்காலத்தில் கோல்டா மேயர் இஸ்ரேல் நாட்டின் ஜனதிபதியாகத்தேர்ந்தெடுக் கப்பட்டார் என்பது மிகச் சாதாரணமான வெகுமானம் என்று கருதப்படத்தக்க அளவு தியாகம் செய்தவர்.

விருந்து மண்டபங்களின் பரபரப்பற்ற அமைதியான சூழ்நிலையில் தயாரிக்கப்பட்டு பேசப்படும் பேருரைகளில் எழுகின்ற கைத்தட்டல் ஒலிகள் விடுதலைப் போராட் டத்திற்கு அன்னியமானவை என்பதுதான் சரித்திரம் காட்டும் காட்சிகளாகும்.

வேட்டுச் சத்தங்களும் வெடிமுழக்கங்களும் வீழ்ந்து குவியும் பிணங்களும் காட் டாருகப் பாயும் இரத்த வெள்ளமும் நாடுகளின் விடுதலைக் காதைகளில் விரவிக் கிடக்கின்றன.

ஆதிக்கவாதி இரத்தவெறி பிடித்து— நீதி நியாயங்களை அடியோடு மறந்து—உணர்வு களை அழித்திடும் போது யுத்தத்தில் போராடிப் பெற வேண்டிய விடுதலையை அமைதியான சபா மண்டபங் களில் வாதாடிப் பெற முடி யாது.

வெகுதொலைவில் அமெரிக் காவின் நியூயார்க் நகரில் மாநாடு நடத்தியிருக்கிருர் கள். ஈழப்போர் முடிந்து வெற்றி விழா நடத்துகிருர் களோ என்று ஐயுறப் தக்க ஆடம்பரமாக நடைபெற்ற அந்த மாநாட்டிற்கும் ஈழத்தில் நிலவும் நிலைமைக் கும் எந்த விதமான சம்பந்த முமில்லை.

ஏதோ ஒரு சம்பிரதாயச் சடங்காக—உல்லாசப் பயணி களின் ஓய்வுநேரக் கருத்தரங் காக விடுதலைப் போரைக் கருதுவோரை எண்ணி இரக் கப்படுவதைத் தவிர வேறு வழிஇல்லை.

பூகோளப் படத்தைப் பார்த்தால் இலங்கைத் தீவு கண்ணீர்த்துளி வடிவத்தில் காட்சி அளிக்கிறது.

உலக வரலாற்றில் பாரம் பரியப் பெருமையைச் சுமந்து கொண்டு கொடி கட்ட இட மில்லாமல் நாடோடிகளாகத் திரிந்து வந்த யூதர்கள் ஒரு புதிய நாட்டை உருவாக்கி உலகப் புகழில் பங்குபெற்றுக் கொண்டனர்.

நாம் ஐந்து கோடித்தமிழர் கள் அடர்ந்து வாழுகிறோம். நமக்கு அண்மையில் நம் உறவினர் படும் கொடுமை கண்டு கண்ணீர் விடும் பெட்டைகளாகத் தான் வாழ்ந்து கொண்டிருக் கிறோம்.

நம் இயலாமை—

துவண்டு தோற்றுவிட்ட பரிதாபம்!

இதை மறைக்க

மாநாடுகள் கூட்டி முழங்கு கிறோம்.

எந்த ஒரு விவகாரத்திலும் தமிழன் ஒற்றுமையாக இருக்க மாட்டான் என்பதை உலகறியச் செய்ய மாநாடு கூட்டி விளக்குவது நமது மரபாகிவிட்டது.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

# அமிர்தலிங்கம் கம்பெனியின் அயோக்கியத்தனம்!

## "சீ...நாயும் பிழைக்கும் இந்தப் பிழைப்பு!"

தமிழீழ மக்களால் நிராக ரித்து ஒதுக்கப்பட்டுத் தமது அரசியல் செப்படி வித்தை களின் இறுதிக் கட்டத்தில் நிற்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி என்று அழைக்கப் படும் அமிர்தலிங்கம் கம்பெனியார், இப்போது வெளிநாடுகளில் தமது வியாபாரத்தைக் கடை விரித் துள்ளனர்.

அரசியல் பதவி ஆசை பிடித்த அமிர்தலிங்கம் கம்பெனியாரை விடுதலைப் போராளிகள் என்று தவருகக் கருதியதால் தான் தமிழினம் இன்றைய அவலநிலைக்குத் தாழ்ந்தது என்பதைத்தமிழீழ மக்கள் என்ருே உணர்ந்து விட்டார்கள்.

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தை ஆயுதப் போராட்ட வழியில் புரட்சி கரமாக முன்னெடுத்துச் செல் வது திரு. பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தான் என்பதை அனுபவ ரீதி யாக உணர்ந்துவிட்ட தமிழீழ மக்கள் அவ்வியக்கத்துடன் தம்மை இணைத்துக்கொண்டு வருகிருர்கள்.

விடுதலைப்புலி இயக்கம் என்ருல் அது பிரபாகரனின் தலைமையிலுள்ள இயக்கம் என்பது உலகம் முழுவதும் அறிந்த சங்கதி.

தமிழ் ஈழ விடுதலையைத் தமது குறிக்கோளாகக் கொண்டு, ஆயுதப் போராட் டப் பாதையை ஏற்றுக் கொண்ட ஐந்து இயக்கங்கள் இன்று இருக்கின்றன.

இந்த ஐந்து இயக்கங்களும் போதாதென்று தனது குடும் பத்தையும், அரசியல் தில்லு முல்லுத் தனங்களையும் பாது காத்துக் கொள்வதற்காக Tena (தமிழீழ தேசிய விடுதலை ராணுவம்) என்ற பெயரில் அமிர்தலிங்கம் குடும்பம் ஒரு புதிய குட்டி இயக்கத்தை ஈன்றுள்ளது.

இதற்கு இளைஞர்களைச் சேர்க்கும் போதும் 'புலி' இயக்கத்தில் சேர்த்து விடு கிறோம் என்று கூறி ஏமாற் றியே இளைஞர்களை இவர் களது ஏஜண்டுகள் சேர்க்கின் றனராம். சேர்ந்த பின்னரே தாம் ஏமாற்றப்பட்டதை இந்த இளைஞர்கள் உணர்ந்து செய்வதறியாது திகைக்கின் றனராம். இது தமிழ் ஈழத்தில் நடைபெறும் நரித் தந்திரம்.

இதைவிட, வெளிநாடு களில் பணம் திரட்டும்போது 'புலி' இயக்கத்துக்குத் திரட்டு வதாகக் கூறிப் பணம் திரட்டி வருகிருர்கள். விஷயம் தெரி யாதவர்கள், பிரபாகரனின் இயக்கத்துக்கு கொடுப்பதாக நினைத்து இவர்களிடம் கொடுத்து விடுகிருர்கள். இப்படி ஒரு ஏமாற்று அண்மையில் மலேசியா, சிங்கப்பூர் பகுதிகளில் இடம் பெற்றது.

இப்படி உண்மை, நேர்மை, நாணயம் எதுவுமின்றி மலேசியாவில் அரசியல் வேசித்தனம் புரிந்தவர் அமிர்தலிங்கம் அம்மையார் தான்.

இந்த அயோக்கித்தனத்தை அங்கு சென்ற விடுதலைப்புலி இயக்கப் பிரமுகர் ஒருவர் மலேசியத் தமிழ் மக்களுக்கு அம்பலப்படுத்தி அம்மையா ரின் மானத்தை வாங்கு வாங் கென்று வாங்கிவிட்டாராம்.

கூத்தணியினரே! உங்களை நிராகரிக்கின்ற — உங்களைத் துரோகிகளாகப் பிரகடனம் செய்திருக்கின்ற விடுதலைப் புலி இயக்கத்தின் பெயரைச் சொல்லி, உண்டியல் சேகரிப் பதற்கு உங்களுக்கு வெட்க மாக இல்லை? உங்கள் சரக்கு விலை போகாதென்ருல் மூட்டை கட்ட வேண்டியது தானே?

மகன் "கமாண்டர் இன் சீஃப்" ஆக உள்ள இயக்கத் துக்கு அம்மா பொய் கூறி மடிப்பிச்சை எடுக்கிரு. சீ உங்களுக்கு வெட்கமாயில்லை? நாயும் பிழைக்குமே இப் பிழைப்பு?

மானம் ரோசம் இருந்தால், புலி இயக்கத்துக்கென்று கூறி மலேசியத் தமிழர்களை ஏமாற்றி சேர்த்த பணம் 61000 டாலர்களையும், பிரபா கரனிடம் கொடுத்து விடுங் கள்!

இனிமேலும் இப்படி ஈனத் தனத்தில் இறங்கினுல் மூக்கறு படுவீர்கள் என்று 'வீர வேங்கை' எச்சரிக்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தர்ம யுத்தத்துக்குத் தயாராகுங்கள்!

## தமிழீழ மக்களுக்கு தலைவர் பிரபா அறைகூவல்!

### தமிழீழ தேசிய பாதுகாப்பு நிதிக்கு வாரிவழங்குமாறும் வேண்டுகோள்!

தேசிய விடுதலைப் போராட்டத்துக்குத் தயாராகுமாறு தமிழ் பேசும் மக்களுக்கு அறை கூவல் விடுத்தும், தமிழீழத் தேசியப் பாதுகாப்பு நிதிக்கு வாரிவழங்குமாறு உலகெங்கிலுமுள்ள தமிழீழ தேசபக்தர்களுக்கு வேண்டுகோள் விடுத்தும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவரும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தலைமைத் தளபதியுமான திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் அறிக்கையொன்றை விடுத்துள்ளார். அவ்வறிக்கையின் விபரம் வருமாறு.

தமிழீழ அரசியல் வரலாற்றிலே என்றுமில்லாத ஒரு சோதனையான, நெருக்கடியான காலகட்டத்தை நாம் எதிர் நோக்கிய வண்ணம் இருக்கிறோம்.

கொடுங் கோன்மையான இராணுவ ஆட்சி எம்மீது திணிக்கப் பட்டிருக்கிறது. ஆயுத பலாத்காரத்தைக் கட்டவிழ்த்து விட்டு மக்களின் அரசியல் அபிலாஷைகளைக் கொன்று விட அரசாங்கம் கங்கணம் கட்டி நிற்கிறது. துப்பாக்கி முனையில் தமிழனை மண்டியிடச் செய்யலாம் என்பதே ஆட்சியாளரின் நோக்கமாக உள்ளது.

#### உறுதிகுலையாத மக்கள்

இவ்விதம் அரச பயங்கரவாதம் கூர்மையாக்கப்பட்டதால் தமிழினம் இன்று தாங்கொணாத் துன்பங்களுக்கு ஆளாக்கப் பட்டிருக்கிறது. உயிரிழப்பும், பொருளிழப்பும், சிறையும் சித்திரவதையுமாக எமது மக்களின் நாளாந்த வாழ்க்கை துன்பமும் துயரமும் தோய்ந்ததாக பயமும் பதட்டமும் நிறைந்ததாக மாற்றப்பட்டு வருகிறது எனினும் எமது மக்களிடம் நம்பிக்கை தளர்ந்து விடவில்லை. உறுதிப்பாடு உடைந்து விடவில்லை. ஒரு விடுதலைப் போராட்டப் பாதையில் இவை எல்லாம் தவிர்க்க முடியாத நிகழ்வுகள்

ஒடுக்கு முறையாளன் தனது இயலாத்தனத்தினால் தனது இறுதி முயற்சியாக ஆயுத பலாத்கார அட்டூழியத்தை அதிதீவிரப்படுத்துவது இயல்பு. எனினும் மக்களை அடிமை கொள்ளும் அவனது இலக்கு ஒரு பொழுதுமே வெற்றி பெறுவதில்லை. அடக்குமுறை எவ்வளவிற்கு அதி தீவிரமாகிறதோ அவ்வளவிற்கு மக்களிடம் புரட்சியுணர்வு பிறக்கிறது. விடுதலை வேட்கை எழுகிறது. விழிப்புணர்வு தோன்றுகிறது. சிங்கள இனவாத ஒடுக்குமுறையானது தமிழீழமெங்கும் புரட்சித் தீயைப் பற்றி எரியச் செய்திருக்கிறது.

#### ஆவேசத் தீ

இன்று எமது எதிரியான சிங்கள அரசுக்கும், அதன் கூலிப் பட்டாளங்களுக்கும் சிம்ம சொப்பனமாக விளங்குவது விடுதலைப் புலிகள் இயக்கமாகும். கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக சிங்கள அரச பயங்கரவாதத்திற்குச் சவாலாக ஒரு தீர்க்கமான, உறுதியான ஆயுதப் போராட்டத்தை நாம் நடத்தி வருகிறோம். அன்று அடக்கப்பட்ட தமிழனின் ஆவேசத் தீயாகப் பிறப்பெடுத்த புலிகள் இன்று மக்களின் எதிர்பார்ப்புகளுக்



தலைவர் பிரபாகரன்

கும், நம்பிக்கைக்கும் பாத்திரமான ஒரு புரட்சிகர விடுதலை இயக்கமாக, மக்கள் இயக்கமாக வளர்ந்திருக்கிறார்கள்.

#### எதிரியின் சூழ்ச்சி

எமது ஆயுதப் போராட்டத்தை எதிர்கொள்ள முடியாத எமது எதிரி தனது ஆவேசத்தை அப்பாவி மக்கள் மீது கட்டவிழ்த்து விடுகிறான். பொதுமக்களைப் போராளிகளுக்கு எதிராகத் திருப்பி விடலாமென்பதே எதிரியின் நோக்கம். எதிரியின் இந்த நாசகாரத் திட்டத்தை நாம் நன்கு அறிவோம். அதே வேளை நாம் மக்களின் துன்ப துயரங்களை அசட்டை செய்யவும் முடியாது. இந்தச் சிக்கலை தவிர்த்துக் கொள்ள நாம் ஆயுதப் புரட்சிப் போரை ஒத்திப்போடுவதும் அசட்டுத்தனமாகும். அதற்குள் எதிரி பலம் பெற்றுத் தமிழ் மண்ணில் நிலைத்து விடுவான். எதிரியைத் தூங்கவிடாது தொடர்ந்து தாக்கி அவனது உறுதிப்பாட்டை உடைத்தெறியவேண்டும். இராணுவ அடக்கு முறையால் தமிழினத்தை ஒடுக்கி விட முடியாது என்பதை ஆட்சியாளருக்கு உணர்த்தி விட வேண்டும். எதிரிஇராணுவத்தைச் சதா பயங்கொள்ளச் செய்து பதட்ட நிலையில் வைத்திருக்க வேண்டும். போராட்டத்தை தீவிரமாக்கி எமது மண்ணிலிருந்து எதிரியை விரட்டியடிக்க வேண்டும்.

#### நிதியுதவி செய்வீர்!

எனினும் எமது போராட்டத்தைத் தீவிரமாக்கும் அதே வேளை எமது மக்களுக்கு தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டும். ஆகவே: எமது போராட்டம் மக்களின் பாதுகாப்புத் திட்டமொன்றை அடிப்படையாகக் கொண்டதாக அமையப் பெறும். இந்தப் பாதுகாப்புப் போர் முறைத் திட்டத்திற்கு எமக்கு பெருமளவு நிதியுதவி தேவையாகிறது. இதற்காகவே நாம் தேசிய பாதுகாப்பு நிதியை ஆரம்பித்திருக்கிறோம். இந் நிதி தமிழீழத்திலும், வெளிநாடுகளிலும் திரட்டப்படும். எமது இயக்க உறுப்பினர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அடையாள அட்டையுடன் மக்களை அணுகுவார்கள். இந்த நிதித் திட்டத்திற்கு மக்கள் தம்மாலான பண உதவி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். இந் நிதி பல ஆயிரக் கணக்கான இளைஞர்களுக்கும், பொது மக்களுக்கும் ஆயுதம் தரிக்கப் பயன்படுத்தப்படும்.

#### தேசிய விடுதலைப் போர்

எமது விடுதலையை இலக்காகக் கொண்ட ஒரு தேசீயப் போருக்கு மக்களைத் தயாராகுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். இது மக்கள் யுத்தம் என்பதால் போராட்டத்தில் மக்களும் பங்களித்தே ஆக வேண்டும். முழு இனமுமே ஒன்றுபட்டு அரசுக்கு எதிராக கிளர்ந்தெழுந்து போராட வேண்டும். இந்த மக்கள் விடுதலைப் போரின் முன்னணிப் படையாக நின்று எமது விடுதலை இராணுவம் போராடும்.

#### களத்திற்கு வருக

ஏனைய விடுதலைக் குழுக்களும் எம்மோடு அணி சேர்ந்து போராடுவதை நாம் விரும்புகிறோம். சென்னையிலிருந்து கொண்டு 'ஒற்றுமை முயற்சி' என்ற போர்வையில் பிரச்சாரப் போராட்டம் நடத்தி காலத்தை வீணாக்காமல் போராட்ட களத்திற்கு வருமாறு எனது அன்புத் தோழர்களை அறைக்கிறேன். போர்க்களத்தில் எதிரியை எதிர்கொண்டு போராடும் சூழ்நிலைகள் எமக்குள் ஒருமைப்பாட்டைப் பிறப்பிக்கும். இக்கட்டான சூழ்நிலைகளில் தமிழீழத்திலிருந்து தப்பியோடாமல் மக்களோடு மக்களாக நின்று எதிரியை [illegible] வருவது எமது இயக்கம் என்பதை மக்கள் அறிவார்கள். மக்களை நாம் பாதுகாக்கும் பலத்தை மக்கள் தான் எமக்கு அளிக்க வேண்டும். எமது இயக்கத்தின் வழிகாட்டலின் பின்னால் மக்கள் அணி திரள வேண்டும்.

#### தமிழர் கடமை

சிங்கள இனவாத அரசும் ஒரு தேசியப் போருக்குத் தன்னைத் தயார்ப்படுத்தி வருகிறது. தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் ஒரு யுத்த நிதியைத் திரட்டி வருகிறது. தேசிய வருமானத்தில் பெரும்பங்கை தனது இராணுவ இயந்திரத்தை நவீனமாக்குவதில் செலவிட்டு வருகிறது. இராணுவத்தின் ஆட்பலத்தை பெருக்கி வருகிறது. இந்நிலையில் தமிழ் பேசும் மக்களும் தமது கடமையிலிருந்து தவறிவிடக் கூடாது. உங்களது விடுதலைக்காக, உங்களது விடிவிற்காக எமது உயிரையே பணயம் வைத்து போராடி வருகிறோம். ஆயிரமாயிரம் இளம் போராளிகள், உங்களது செல்வங்கள் இந்த உரிமைப் போரில் களம்புகத் தயாராகின்றனர். இந்த நெருக்கடியான கால கட்டத்தில் எமக்குக் கை கொடுத்து உதவினால் உங்களது பாதுகாப்பிற்கு அரணாக அமையும்.

#### தர்மயுத்தம்

எமது போராட்டத்தில் நாம் தனித்து நிற்கவில்லை. தமிழக மக்களின் ஒன்று திரண்ட மாபெரும் சக்தி எமக்குப் பக்கபலமாக இருக்கிறது. அகில இந்திய மக்களின் அனுதாபமும் எமது பக்கமே இருக்கும். எனினும் எமது எமது விடுதலையைப் பெற்றுக் கொள்ள நாமே போராடி ஆக வேண்டும். முழு உலகமுமே இன்று ஈழத் தமிழினத்தின் நியாயபூர்வமான போராட்டத்தில் கண்ணும் கருத்துமாக இருக்கிறது. எனவே நாம் எதற்கும் அஞ்சத் தேவையில்லை. அழிவுகள் ஏற்படாத போராட்டங்களே இல்லை. அழிவிலிருந்தே ஆக்கம் பிறக்கிறது. நாம் சுதந்திரமாக வாழ வேண்டுமென்றால், நிம்மதியாக வாழவேண்டுமென்றால், தனியரசை அமைத்து தன்மானத்துடன் வாழவேண்டுமென்றால் நாம் போராடியே தீரவேண்டும். எத்தனை தியாகங்களைப் புரியவும் தயாராக வேண்டும். வரலாறு யுத்தமாக புரட்சியாக வெடிக்கிறது. அந்த யுத்தம் தர்மத்தின் சார்பாக வெற்றி பெறும். எமது தேசிய விடுதலை யுத்தமும் வெற்றி பெறுவது திண்ணம். ஏனெனில் தர்மம் எமக்கு சார்பாக நிற்கிறது.

---

## நீ அடிமையாக வாழ விரும்புகிறாயா?

இந்த நிலையற்ற உலகில் எல்லாம் அழியும் தன்மை உடையது. எல்லாம் அழிந்தே தீரும். ஆனால் எண்ணங்கள் குறிக்கோள்கள், கனவுகள் அழிவதில்லை. நீண்ட துயரினாலும் தியாகத்தினாலும் அன்றி எந்த ஒரு உயர்குறிக்கோளும் தனது நிறைவைக் கண்டதில்லை.

தான் ஒரு கொள்கைக்காக வாழ்ந்து மடிந்தேன் என்பதைவிட அமைதி தரத்தக்க செயல் உலகில் வேறு என்னதான் உண்டு? தான் கடைப்பிடிக்கும் கொள்கைக்காக தன்னை முற்றாக அர்ப்பணிப்பதைவிட வாழ்வில் அடைவதற்கரிய பேறு ஏதும் உண்டா?

எனது நாட்டுமக்களுக்கு யான்கூறத்தக்கது இதுதான். உலகில் மிக்க கொடூரமான குற்றம் என்னவென்றால் அது அநீதிக்கும் நேர்மையற்ற செயல்களுக்கும் விட்டுக்கொடுத்தலே என்பதை மறக்க வேண்டாம். உலகில் நிலையான இயற்கைச் சட்டத்தை நினைவுகூருங்கள். உனது உயிரைப் பெறவேண்டுமானால் உன் உயிரைக் கொடு.

உலகில் தலையாய அறம் என்னவென்றால் விளைவுகளைப் பற்றிப் பொருட்படுத்தாது அட்டூழியங்களை எதிர்த்துப் போரிடுவதே இன்னும் எம்மை ஆளுகின்ற அரசாங்கத்தைப் பார்த்து யான் கூறுவது இதுவே. வகுப்பு வாதம், அநீதி என்ற பாதையில் செல்கின்ற உன் வெறி உணர்ச்சியை உன் தவறான போக்கிலிருந்து திருந்துவதற்கு இன்னும் காலம் கடந்து விடவில்லை. நீ எமக்கு எதிராகக் கையாளுகின்ற ஆயுதமே உன்னை வந்து திருப்பித் தாக்கும் என்பதை மறவாதே.

—சுபாஷ் சந்திரபோஸ்

www.tamilarangam.net

www.tamilarangam.net



# தமிழர்களையும் முஸ்லிம்களையும் கொன்று குவிக்க ஆயுதம் குவிப்பு!

## அமெரிக்கா, பாகிஸ்தானிடமிருந்து சிங்கள இனவெறி அரசு இறக்குமதி!

இலங்கையில் வாழும் தமிழர்களையும் முஸ்லிம்களையும் கொன்றொழிப்பதற்காக சிங்கள பௌத்த வல்லாண்மை அரசு பெருந்தொகையான நவீன ஆயுதங்களை கடந்த சனவரிக்கும் ஏப்ரலுக்குமிடையில் வெளி நாடுகளிடமிருந்து வாங்கிக் கொழும்பு நகரில் குவித்துள்ளது.

தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை முறியடிக்கவும் அமெரிக்கத் தூதரகத்தில் இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவு அமைக்கப்பட்டுள்ளதை எதிர்த்து வரும் முஸ்லிம் சகோதரர்களைக் கொன்றொழிக்கவும் இந்த நவீன ஆயுதங்கள் பயன்படுத்தப் படவுள்ளன.

தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுப்பதிலேயே ஜெயவர்த்தன அரசு கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டு வருகிறது. இந்திய அரசுக்கு கண் துடைப்பு காட்டுவதற்காக சர்வ கட்சி மாநாடு என்ற நாடகத்தையும் சிங்கள அரசு நடத்தி வருகிறது. ஜெயவர்த்தன அரசு அமெரிக்காவிடமிருந்தும், பாகிஸ்தானிடமிருந்துமே ஆயுதங்களை வாங்கிக் குவித்துள்ளது. அமெரிக்க ஆயுதங்கள் பாகிஸ்தானுக்கு வந்து அங்கிருந்து கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன.

சனவரி 24 ஆம் திகதி பத்து பெட்டிகளில் ரிவால்வர்களும் ''காஸ்'' துவக்குகளும் (10 Cartons of Revolvers and Gas Guns) ''தவளகிரி'' என்ற கப்பலில் பாகிஸ்தானில் இருந்து கொழும்புக்கு அனுப்பப் பட்டுள்ளது.

இதன் பின் மூன்று வாரம் கழித்து 7. 62, 5.6 S L R துப்பாக்கிகளை (Semi Automatic Self loading Rifles) 50 பெட்டிகளில் ''லங்கா அற்றிலா'' என்ற கப்பலில் கொழும்பில் இறக்குமதி செய்துள்ளனர்.

பெப்ரவரி 20ஆம் திகதி தான், கொழும்புக்கு ஆகக் கூடுதலான ஆயுதக் கொள்முதல் கப்பல் சென்றது, லங்கா அமிலா என்ற கப்பலில், 50, 000 RDX காட்ரிச்சுக்களும் 22 Tonnes and 38 STW 125, 50,000 RDX, 12 bore S.G 50,000 12 bore No 4—ஆகியவை அனுப்பப்பட்டன.

மார்ச் திங்களில் ''பிரெசிடெண்ற் வான் பிறீனொல்'' என்ற கப்பலில், கண்ணீர்ப் புகைக் குண்டுகள் அனுப்பப்பட்டன.

ஏப்ரல் ஒன்பதாம் திகதி லங்கா அஜிதா என்ற கப்பலில், இரவில் இருண்ட பகுதிகளில் துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு முன், அப்பகுதியை ஒளியூட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் எரி மருந்துகள் (Pyrotechnics) அனுப்பப்பட்டன.

இந்த நான்கு மாதங்களிலும், ஆகக் கூடுதலான ஆயுத இறக்குமதி ஏப்ரல் 19 ஆம் திகதி ''லங்கா அமிதா'' என்ற கப்பலில் வந்து இறங்கியது. இதில் மொத்தமாக 490,000 RDX காட்றிச்சுக்கள் இறக்குமதி செய்யப்பட்டன. (These Included 50,000 RDX Cartridge 9 Mm Paralellum, 50000 RX 9mm Paralellum, 50,000 RDX Cartridges 7.62mm (Nato Type) 5000 RD Cartridges 7.66mm Blanks (Nato Type); 80,000 RDX. .38 Special with Metal paint round bore bullet and 150,000 RDX 9mm Paralellum with Full jacket)

கடைசியாக ஏப்ரல் 24 ஆம் திகதி ''பிறின்ஸ் மார்க்கின்லி'' எனும் கப்பலில், 5 பெட்டி வெடிமருந்துகள் கொழும்பில் வந்து இறங்கின.

பிறெசிடென்ற் வான் பிறீனொல் பிறின்ஸ் மார்க்கன்லி ஆகிய இரு கப்பல்களைத் தவிர ஏனைய கப்பல்கள் அனைத்தும் யுத்த தளபாடங்களுடன் கராச்சியிலிருந்தே கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இவற்றை விட, வடக்கு கிழக்கு மாகாணக் கரையோரக் கண்காணிப்புக்கென ஏராளமான கடற்படைப் படகுகளை சீன சிங்களவருக்கு கொடுத்துதவியுள்ளது. 18 கோடி ரூபாய் செலவில் மூன்று புதிய கப்பல்களும் கொள்வனவு செய்யப்படுகிறது.

இவை போதாததற்கு, அமெரிக்கத் தூதரகத்தில் இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவு நிறுவப்பட்டு சர்வதேசப் பயங்கரவாதிகளான 'மொசாட்' நிறுவனத்தின் 150 அதிரடிப் படையினரும், லண்டனிலிருந்து எஸ்.ஏ.எஸ் கூலிப் படையினரும் கொழும்பு வந்துள்ளனர்.

இஸ்ரேலிய மொசாட் பயங்கரவாதிகள் யாழ்ப்பாணத்தில் தங்கள் கைங்கரியத்தை ஆரம்பித்து விட்டனர். இவர்களுக்கு உதவுவதற்காக முன்னூர் ஐ. ஜி. பியும், கொலைசெய்வதற்கு அஞ்சாதவருமான சிட்னி டீ சொய்சா என்பவன் நியமிக்கப்பட்டுள்ளான்.

சிட்னி டீ சொய்சா, மாதம் ரூபா 15000 சம்பளம் கொடுத்து சில தமிழ்த் துரோகிகளை ஆங்காங்கு நியமித்துள்ளாராம். இத்துரோகிகள் தமிழீழப் போராளிகளைப் பற்றி 'மொசாட்'டுக்கு சிட்னி சொய்சா மூலமாகத் தகவல் கொடுப்பார்களாம்.

காட்டிக் கொடுக்கும் இக்கயவர்களின் பெயர் பட்டியல் விடுதலைப் புலிகளின் கைகளுக்கு கிடைத்து விட்டதாகவும், இவர்கள் தமது துரோகத்துக்கு உரிய தண்டனையை விரைவில் அனுபவிக்க நேரிடும் என்றும் அறியப்படுகிறது.

---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

முயன்றது, நான் ஆசிரியராக இருந்தசுதந்திரனை இழுத்து மூடி சீல் வைத்தது.

சிறைக்குள் நான் இருந்த போதுதான்— எதற்கும் அஞ்சாத இரு வீர இளைஞர்கள் சீலனும் ஆனந்தனும் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் வீறுமிக்க இரு காளைகள்—யாராலோ காட்டிக் கொடுக்கப்பட்டு— இராணுவத்தால் முற்றுகைச் சூழப்பட்ட நிலையில்சிங்கள இராணுவத்திடம் பிடிபடுவதுமில்லை, சரணடைவதுமில்லை என்கிற தமது இயக்கத்தின் உன்னத கோட்பாட்டின்படி 1983 யூலை 15ஆம் நாள் தம்மைத் தாமே சுட்டுக் கொண்டு மாண்டனர் என்கிற வேதனைச் செய்தி கேட்டு, கண் கலங்கினேன்.

தம்பி, இவற்றை நான் ஏன் சொல்கிறேன் என்றால்—1983யூலை 23 ஆம் நாள், திருநெல்வேலியில் 13 இராணுவத்தினர்—சிங்கள ஏகாதிபத்தியத்தின் சின்னங்கள்—தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவினால் அழிக்கப்பட்டதுதான், 1983இல் இலங்கைத் தீவில் நடை பெற்ற தமிழின ஒழிப்புக்குக் காரணம் என்று ஒரு சொத்தை வாதத்தைச் சிங்கள ஆக்கிரமிப்பு அரசு மட்டுமின்றி ''நம்மவர்கள்'' எனப்படுவோர் சிலரும் கூறித் திரிகிறார்களே—அதைப் பொய்யாக்கத்தான். அதற்கு முன்னர் யூன் திங்களிலேயே தமிழின ஒழிப்பு வேலைகள் முழுவேகத்துடன் ஆரம்பமாகி அது யூலைத் திங்கள் பிற்பகுதியில் தீவு முழுவதும் திட்டமிட்டு விரிவுபடுத்தப்பட்டு உள்ளது ஆளும் சிங்கள முதலாளித்துவ யூ. என். பிக் கட்சியினால்! இதுதான் உண்மை. பச்சை உண்மை.

தமிழினப் படுகொலைக்கு ஒரு கிழமைக்கு முன்னர்தான் யாழ்ப்பாணத் தமிழரைப் பற்றி எனக்கு அக்கறையில்லை; அவர்கள் எக்கேடாவது கெடட்டும்; நான் தமிழீழ விடுதலைப் போராளிகளை அடியோடு அழிக்கத் தீர்மானித்து விட்டேன்; வேண்டுமானால் அவர்களை விசாரிப்பதற்கு இராணுவ நீதிமன்றங்களையும் ஏற்படுத்துவேன் — என்று லண்டன் டெயிலி ரெலிகிராப் ஏட்டுக்குச் செவ்வி கொடுத்து—இதைத் தன்னுடைய சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகளில் எல்லாம் பெரிதாகப் போடுவித்து இனவாதத் தீக்கு வழமை போல நெய்யூற்றி விட்டவனே ஜே ஆர். ஜெயவர்த்தன தான்.

தீவடங்கிலும் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் குரூரமாகக் கொலை செய்யப்பட்டனர்; ஆயிரக்கணக்கான தமிழ்ப் பெண்கள் கட்டிய கணவன் முன்பும், பெற்றோர் முன்பும் சிங்கள மிருகங்களால் கற்பழிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர்; ஒரு இலட்சம் தமிழர்களின் வீடுகள் சூறையாடப்பட்டு தீயிடப்பட்டன; பல ஆயிரகோடி ரூபா பெறுமதியான தமிழர் சொத்துக்கள் சூறையாடப்பட்டன, சிங்கள அரசின் முப்படைகளும், சிங்கள இனவெறிக் குண்டர்களும் சேர்ந்து நடத்திய கொடுமைகள் இப்படி எண்ணற்றவை!

இவை கலவரத்தின் போது நடந்தவை என சிங்கள ஆட்சியாளர் சுலபத்தில் கூறித் தப்பித்து விடலாம்; ஆனால், பாதுகாப்பு அமைச்சினதும், நீதிமன்றங்களினதும் உத்தரவின் பேரில் வெலிக்கடை சிறைச்சாலையிலே விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த 53 தமிழ் அரசியல் கைதிகளும் திட்டமிட்டு தொடர்ந்து இரு நாட்கள் ஈனத் தனமான படுகொலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர் என்கிறபோது இது ஆட்சியாளரே திட்டமிட்டு நடத்திய இனப்படுகொலை என்பது துலாம்பரமாகிறதல்லவா? இந்தப் படுகொலைக்கு பதில் சொல்ல ஐ. நா. மனித உரிமைக் குழுவில் சிங்கள அரசு இன்றைக்குச் சமாளிக்கலாம்.

ஆனால் என்றோ ஒரு நாள்—தமிழீழத்தின் விடுதலைக்காக ஆயுதமேந்தியுள்ள தமிழ் இளைஞர் சக்திக்கு சிங்கள வல்லாட்சி இதற்குப் பதில் சொல்லியே தீர வேண்டும்!

அதே போல—யாழ்ப்பணத்திலே 1983 யூலை 24இல், வீடு வீடாகப் புகுந்து அப்பாவித் தமிழர்கள் 53 பேரை துடிதுடிக்கப் பதைபதைக்கச் சுட்டுக் கொன்றதே சிங்கள இராணுவம்—அந்த இராணுவம், சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவம், தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ நீதிமன்றத்துக்குப் பதில் சொல்லும் நாள் விரைந்து வந்தே தீரும். இது நிச்சயமானது!

நான் சிறையிலே இருந்த போது, 1983 ஆகஸ்ட் நான்காம் நாள், தமிழீழப் பிரிவினை கோருவதை தடைசெய்யும் கறுப்புச் சட்டம் ஒன்றை சிங்கள நவகாலனித்துவ ஏகாதிபத்தியம் அவசரம் அவசரமாக நிறைவேற்றியது; சிங்கள நாடாளுமன்றத்திலும் மேடைப் பேச்சு அரசியலிலும், தேர்தல்களிலும் ஈடுபாடும் ஆசையும் கொண்டோரை அச்சட்டம் கட்டிப்போடுகிறதே தவிர— பாராளுமன்ற அரசியலையே நிராகரித்து, தமிழீழ விடுதலையைப் புரட்சிகர வழியில் ஆயுதப் போராட்டத்தின் மூலம் நிலைநிறுத்தப் போராடுவோரை சிங்கள அரசின் எந்தச் சட்டமும் கிட்ட நெருங்கிட முடியாது

1978 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யும் ஒரு சட்டத்தை சிங்கள அரசு நிறைவேற்றியது. அச்சட்டத்தால் ஏதாவது பலன் ஏற்பட்டதா? சட்டம் புத்தகத்திலே கிடக்கிறது—தமிழர்கள் விடுதலைப் புலிகளாய் மாறிவிட்டார்கள்! இயக்கம் மேலும் வளர்ச்சியடைந்து— சிங்கள இராணுவத்துடன் மோதும் சக்தியைப் பெற்று வருகிறது!

சுதந்திரம் பெற முடிவு எடுத்து விட்ட மக்களின் முன்பு அன்னிய ஆட்சியின சட்டங்கள்

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

# தமிழ், சிங்கள இனங்களிடையே பிரிவினை கூர்மையடைகிறது!

## தமிழர் பிரச்னையில் ஜே. ஆரிடம் விரிந்த கண்ணோட்டம் இல்லை!

## பிரெஞ்சு இதழுக்கு இந்தியப் பிரதமர் செவ்வி!

இலங்கையில் தமிழ், சிங்களத் தேசிய இனங்களிடையே பிரிவு மனப்பான்மை கூர்மையடைந்து வருவதாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தெரிவித்துள்ளார். அண்மையில் டெல்லி வந்திருந்த சிறிலங்கா ஜனாதிபதி ஜெயவர்த்தன நடத்திய பேச்சுக்கள் அவ்வளவு உற்சாகத்தை அளிப்பதாக இல்லையென்றும், இலங்கைத் தமிழர்களின் கடந்த கால வரலாற்றையும் அவர்களின் எதிர்காலத்தையும் முன் வைத்துப் பரந்த கண்ணோட்டத்துடன் இலங்கைத் தமிழர் பிரச்சினையை ஜெயவர்த்தன அரசு அணுக முன் வரவில்லையென்றும் திருமதி காந்தி வருத்தம் தெரிவித்துள்ளார்.

பிரான்சின் தலைநகரான பாரிசிலிருந்து வெளிவரும் Le figaro (லீ பிகாரோ) செய்தி ஏட்டின் சிறப்பு நிருபர் செல்வி. நாதாலி பிளேம் (Ms. Nathalie Blime) என்பவருக்கு திருமதி காந்தி கொடுத்த செவ்வியிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

நிருபர் இலங்கையின் இனப் பிரச்சினை குறித்து திருமதி இந்திராவிடம் தொடுத்த வினாக்களும் அதற்கு திருமதி காந்தி அளித்த பதில்களும் வருமாறு

கே: சிறீலங்காவின் ஜனாதிபதியுடன் நீங்கள் அண்மையில் மேற் கொண்ட சந்திப்புக் குறித்து உங்களது கணிப்பு என்ன?

ப: நாங்கள் எதுவித திட்டங்களையும் முன் வைக்கவில்லை. நாம் அவர்களது பிரச்னையில் தலையிட விரும்பவில்லை. ஆயினும், பிரச்சினையில் இந்தியத் தமிழர்கள் சம்பந்தப் பட்டிருப்பதாலும், இலங்கைத் தமிழ் அகதிகள் இங்கு வரத் தொடங்கியதாலும், இரு இனங்களுக்குமிடையே ஏதாவது உடன்பாடு அல்லது இணக்கம் ஏற்படுத்த முடிந்தால் நாங்கள் அதற்கு உதவி செய்யலாம் என்று கருதினோம். இலங்கையில் வாழும் சிங்கள, தமிழ் தேசிய இனங்களிடையே பிரிவினை உணர்வு கூர்மையடைந்து வருகிறது. நாங்கள் எமது நல்லெண்ணத்தையே அளித்தோம்.

கே: ஜெயவர்த்தனவின் வருகையும், அவருடன் நீங்கள் நடத்திய பேச்சும், உங்களுக்கு உற்சாகம் தருகிறதா இல்லையா?



ப: அவ்வளவு பெரிய உற்சாகத்தை அளிக்கவில்லை. எங்கள் முக்கிய நோக்கம் ஒரு உடன்படிக்கைக்கு வருவதற்கு அவர்கள் தமது மக்களுக்கு எவ்வகையிலேனும் ஒரு வாய்ப்பை அளிக்க வேண்டும் என்பதே.

கே: தமிழ்நாட்டில் அடைக்கலம் புகுந்துள்ள பயங்கரவாதிகளைத் தம்மிடம் திரும்ப ஒப்படைக்குமாறு சிறீலங்கா அரசு, உங்களிடம் முறையான ஒரு கோரிக்கையை விடுத்தால்

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

---

(8ம் பக்கத் தொடர்ச்சி)

குமுறும் எரிமலைக்கு நிகரான விடுதலைப் போரைப் பற்றி குளிர் சாதன அறைகளில் விவாதிப்பதே ஒரு வகையான துரோகம் தான்.

யாழ்ப்பாணத்தில் சிங்களவன் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு ரகசியப் பாசறைகள் அமைத்துப் போராடும் விடுதலை வீரர்களுக்கு இப்போது—

நியூயார்க் தீர்மானங்கள் தேவையில்லை.

வாழ்த்துரைகள், பாராட்டு மொழிகள் தேவையில்லை.

அவர்கள் மிகப்பெரிய மனிதத் தன்மையற்ற மிருக ஜாதியை எதிர்த்துப்போராடுகிறார்கள்.

நெஞ்சுறுதி மிக்க அந்த ஈழத் தமிழ் வீரர்களின் பல மிகக கரங்களில் பகைவனைத் தகர்த்து வீழ்த்த ஆயுதங்களே தேவை.

(நன்றி : எதிரொலி)

---

(5ம் பக்கத் தொடர்ச்சி)

ராஸ் நாடுகளின் சர்வாதிகாரிகளுக்கும், இஸ்ரேலியத் தலைவர்களுக்கும் இடையே தொடர்புகளை 'மொஸாத்' ஏஜெண்டுகள் ஏற்படுத்திக் கொடுக்கின்றனர்.

சுருங்கக் கூறின், அரசியல் கொலை, அச்சுறுத்தல், வெகுஜனக் கொலை, ஆட்களைக் கடத்துதல் உட்பட பற்பல பயங்கரக் குற்றங்களிலும் தேர்ச்சி பெற்ற சர்வதேச பயங்கரவாதக் கும்பல்தான் 'மொஸாத்' அது சி. ஐ. ஏ-யின் கூட்டாகப் பணியாற்றும் ஸ்தாபனம்.

அதனால்தான், அந்த ஸ்தாபனத்துடன் இலங்கை அரசு ஒத்துழைப்பதற்கான திட்டத்தை அந்த நாட்டின் முற்போக்கு சக்திகள் எதிர்க்கின்றன.

'பயங்கர வாதத்தை' எதிர்ப்பதாகக் கூறும் ஜெயவர்த்தனே, படு பயங்கரவாதிகளிடம்சரணடைகிறார்.

---

(6ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழ மண்ணிலேயே பிரகடனப் படுத்த வேண்டும்.

இத்தகைய சட்டமறுப்பு ஒன்றைச் செய்து அதன் விளைவுகளை ஏற்றுக் கொள்வதற்கு அமிர்தலிங்கமோ அவரது 'பொலிட்பீரோ'வோ பொதுச் சபையோ முன் வரமாட்டாது என்பது எமக்குத் தெரியும்.

ஏனெனில் பொதுச் சபையோ செயற்குழுவோ அமிர்தலிங்கம் கட்சிக்கு இருந்தால்தானே?

வெறும் தேர்தல் வெற்றிக்காக, மக்களுக்கு உணர்ச்சிமயமான பேச்சுக்களால் சூடேற்றி, தமிழ் ஈழம் என்று ஏமாற்றியவர்கள் — இன்று சரியான அமைப்புடன் விரிவான கொள்கைத் திட்டங்களுடன் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்துக்கான பொறுப்பை விடுதலைப் புலிகளும் அதன் தலைவன் பிரபாகரனும் 92 சதவீதமான தமிழ் ஈழ மக்களின் பூரண ஆதரவுடன் ஏற்றுக் கொண்டு விட்டதால் நீர்வற்றிய குளத்து மீன்களைப் போலத் துடிக்கிறார்கள்.

இனித் தமிழ் ஈழம் சுதந்திரமடையும் மட்டும், தேர்தல் என்ற மழை பொழியப் போவதுஇல்லை—பதவி ஆசை பிடித்தவர்களும் இலட்சியத்தை விற்றுவிட்டவர்களுமான கூட்டணி அரசியல்வாதிகள் அதிலே திளைக்கப் போவதுமில்லை!

தமிழ்மக்கள் எரிமலையாய் வெடித்துக் கிளம்பும்போது இவர்கள் அனைவரும் அதிலே அழியப்போகிறவர்களே.

—கோவை

---

(7ம் பக்கத் தொடர்ச்சி)

அதை சிங்கள ஆக்கிரமிப்பாளனுக்கு எதிராகவே பயன்படுத்தச் சத்தியம் எடுப்போம்!

ஒவ்வொரு தமிழனும் பத்து சிங்களச் சிப்பாயையாவது அழிக்க உறுதியெடுப்போம்!

கையிலே கிடைக்கக் கூடிய அனைத்துமே நமக்கு ஆயுதமாகப் பயன்படட்டும்!

அஞ்சாநெஞ்சும், மதிநுட்பமும், இராணுவ வியூகமும் "செய் அல்லது செத்துமடி" என்ற உறுதிப்பாடும கொண்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது முழு நம்பிக்கை வைத்து அதைச் சுற்றி அரணுவோம்.

அஹிம்சைப் போராட்டத்துக்கு ஈழத்திலே ஒரு தந்தை செல்வா வழி காட்டினார் என்றால்— ஆயுதப் போராட்டத்தை வழிநடத்துவதற்கும் இன்று நமக்கு ஓர் ஆற்புதமான தலைவன் கிடைத்திருக்கிறான்.

பிடல் காஸ்ரோ, சேகுவேரா, யாசிர் அரபாத் கேணல் கடாபி, என்று எவர் எவரையோ பற்றிப் பேசுகிறோம் --- அவர்கள் அனைவரது ஆற்றலும் தியாகமும் நிறைந்த பிரபாகரனைக் கையிலே வைத்துக் கொண்டு.

கையில் வெண்ணெய் இருக்க-நெய்க்கு அலையலாமா?

அனைத்து இயக்கங்களும் பிரபாகரனின் இராணுவத் தலைமையை ஏற்று இணைய முன்வந்தால், தமிழ் ஈழம் விரைவில் மலரும்— இன்றேல் சிலகாலமெடுக்கும்!

---

(10ம் பக்கத் தொடர்ச்சி)

வெறும் கால் தூசு; அவற்றை காலின் கீழ் போட்டு மிதித்து விட்டு விடுதலைப் படை முன்னேறும்! இதுவே உலக நடைமுறை; இதற்கு ஈழத் தமிழ். மட்டும் விதி விலக்கல்லவே.

தம்பீ, பேச்சு வார்த்தை, இணக்கப் பேச்சு, உடன்படிக்கை, மறுபடி தேர்தல், சிங்கள நாடாளுமன்றத்தில் இடம் பிடித்தல்—இவையெல்லாம் நமது வரலாற்றில் முடிந்து போன பழைய கதைகள். காலமெல்லாம் பாராளுமன்ற அரசியல்வாதிகளாய் இருந்து, காலத்தின் சூழ்நிலையால் விடுதலைப் போராட்டத்துக்குள் வேறு வழியின்றித் தள்ளப் பட்டவர்கள், அதற்கு ஈடு கொடுக்க முடியாமல் மறுபடியும் பழைய பாதைக்கே ஓட எண்ணலாம் —அவர்கள் ஓடட்டும்! விடுதலையன்றி வேறு எதையும் ஏற்றுவதில்லையெனச் சபதம் ஏற்றிட்ட தமிழ் மக்கள் அவர்களை தமது மத்தியிலிருந்து ஓடோட விரட்டி ஓட்டியே விடுவர்!

காலம் ஓடிக் கொண்டிருக்கிறது; நமது அடிமை விலங்குகள் மேலும் இறுக்கப்படுகின்றன; இவற்றை அறுத்தெறிய இளைய தமிழ் நெஞ்சங்கள் துடித்தெழுகின்றன. இவ்வாறு துடித்தெழும் தமிழ் இளைஞர் கூட்டம் நன்கு பயிற்சி பெற்ற கட்டுப்பாடான இராணுவத் தலைமையின் கீழ், கட்டுப் பாட்டுடன் விடுதலைப் போருக்குத் தம்மைத் தயாராக்க வேண்டும். ஆர்வத்தில் அவசரத்தில் எங்கெங்கோ அலைந்து, எமது இளைஞர் சக்தி அவமாகிவிடக் கூடாது; சிங்கள ஏகாதிபத்தியத்தின் கைகளில் இனி எந்த ஒரு இயக்க இளைஞனும் உயிரோடு சிக்குவதில்லை என்கிற உறுதியை ஏற்று செயற்பட வேண்டும். எக்கட்டத்திலும் கடமை கண்ணியம் கட்டுப்பாடு காத்திட வேண்டும்.

தம்பீ, இதோ, தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு மேலும் வலிவும் பொலிவும் ஊட்டிடவும்' சிங்கள அரசின் செப்படி வித்தைகளை ஊருலகத்துக்கு அம்பலப்படுத்திடவும் சந்தர்ப்பவாதிகளை தோலுரித்துக் காட்டிடவும் உன் கையிலே தவழவிடுகிறேன் 'வீரவேங்கை'யை!

சுதந்திரவேட்கைத் தடுத்திடின் கோவையின் குரலைக் கேட்காது நசித்து விடலாம் என்று எண்ணிய ... தமிழீழ நாட்டின் விடுதலைக் குரலாய் உறுமுகிறது 'வீரவேங்கை' எனும் நம் புதிய ஏடு!

ஆமாம் தம்பி, "வேங்கைகள்" என்று தம்மைச் கூறிக் கொண்டு பலர் இருக்கலாம் நாட்டிலே—அவற்றுளே "வீரவேங்கை" யார் என்பதை போகப் போக நீ புரிந்து கொள்ளுவாய்!

சுதந்திரத் தமிழீழக்குரலை ஓங்கி ஒலித்திடும் "வீரவேங்கை"க்கு ஆதரவு தந்திடுவாய் நீ என்பதிலே எனக்கு கிஞ்சிற்றும் ஐயமில்லை... நீ மட்டும் படித்தால் போதாது; பத்துப் பேருக்காவது படிக்கக் கொடு—பத்துப் பேரை 'வீரவேங்கை'யின் உறுப்பினராக்கித் தா! விடுதலைப் போருக்குத்தா!

வீரவேங்கையின் உறுமல் கேட்டு பதைபதைக்கட்டும் சிங்களம்! சிங்களம் மட்டுமன்றி இனத் துரோகிகளும் சந்தர்ப்பவாதிகளும் குலைநடுங்கட்டும், மீண்டும் அடுத்த இதழில் எழுதுகிறேன். அதுவரை பொறுத்திரு.

அண்ணன்

கோவை மகேசன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

FOR PRIVATE CIRCULATION ONLY [redacted] வீரவேங்கை - யூலை, 1984.

# அரபு நாடுகள் அனைத்தும் உறவுகளை முறிக்கும்!

## 'சியோனிச - சிங்கள இச' கூட்டுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை

அரபு மக்களினதும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினதும், பரம விரோதியும், சர்வதேசப் பயங்கரவாதிகளுமான இஸ்ரேலியருடன் சிங்கள ஜெயவர்த்தன அரசு இராஜ தந்திர உறவை ஏற்படுத்தியதுடன் கொழும்பில் இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவை நிறுவியதையிட்டு அரபு நாடுகள் அனைத்தும் கடுமையான ஆத்திரம் அடைந்துள்ளன.

ஜோர்டான், சவூதிஅரேபியா, லிபியா, சிரியா, போன்ற பல அரபு நாடுகளும், அணி சேரா நாடுகளும் ஜெயவர்த்தனவைக் கண்டித்துள்ளன.

சவூதி அரேபியா புதிய இலங்கைத்தூதரை ஏற்கமறுத்துள்ளதுடன், சவூதி அரேபியாவிலுள்ள அத்தனை தொழில் செய்யும் சிங்களவர்களையும் திருப்பி அனுப்பப் போவதாக எச்சரித்துள்ளது.

இஸ்ரேலைத் திருப்பி அனுப்பாவிடின் இலங்கையுடனன ராஜாங்கத் தொடர்புகளை துண்டிக்கப்போவதாக லிபியா ஜனதிபதி கேர்ணல கடாபி கூறியுள்ளதாக தெரிகிறது.

இலங்கையுடனன ராஜதந்திர, மற்றும் வர்த்தகத் தொடர்புகளையும் அரபு நாடுகள் துண்டிப்பதற்கு ஆலோசித்து வருகின்றன. குறிப்பாகஎரிபொருள்கள் அனுப்புவதை அரபு நாடுகள் நிறுத்தக்கூடும்.

சிரியாவும் ஜெயவர்த்தவின் நடவடிக்கையைக் கடுமையாகக் கண்டித்துள்ளது.

ஜெயவர்த்தன அரசுக்கு எதிராக அரபு நாடுகள் கூட்டாக எடுக்கும் நடவடிக்கை பற்றி அரபு லீக் விரைவில் முடிவு செய்யவுள்ளது.

கடைசியாகக் கிடைத்த செய்திகளின்படி சவூதி அரேபியாவும், ஈராக்கும், ஜெயவர்த்தன அரசுடனன சகல ராஜதந்திர, வர்த்தகத் தொடர்புகளையும் துண்டித்துக் கொண்டுவிட்டன.

22 அரபு நாடுகளும், அணி சேரா நாடுகளும் இணைந்து இலங்கை அரசுக்கு எதிராகக் கூட்டுப் போராட்டம் நடத்துவது பற்றி விரைவில் முடிவு எடுக்கவுள்ளன.

---

(11ம் பக்கத் தொர்ச்சி)

உங்கள் பதில் நடவடிக்கை எவ்வாறு அமையும்?

ப: தங்கள் உயிரைப் பாது காப்பதற்காக ஏராளமான தமிழ் அகதிகள் இங்கு வந்துள்ளனர். இது முதலாவது பிரச்சினை, அவர்கள் இங்கு நிரந்தரமாக வாழ விரும்பவில்லை. அவர்கள் வேறு விதமான சூழலில் அங்கு வாழ்ந்தவர்கள். எமக்கும் இங்கு அகதிகளை வைத்திருக்க விருப்பம் இல்லை. ஆனல் எமக்கென்று சில சட்டங்கள் உண்டு. ஐக்கிய இராச்சியத்திலும் இதே நிலைமை இருப்பதாக நான் கேள்விப்பட்டேன்.

கே: நங்கள் என்ன செய்வீர்கள் என்பதைக் கூற வில்லையே?

ப: எமது சட்டங்களின் படியே நாம் செயற் படுவோம்.

கே: சிறீலங்காவுடன் குற்றவாளிகளைப் பரிமாற்றம் செய்யும் ஒப்பந்தம் எதையாவது இந்தியா செய்திருக்கிறதா?

ப: அவ்வாறு எதுவும் இல்லை.

கே: சிறீலங்கா ஜனதிபதியின் கருத்தைக் கவனித்த போது இந்தியாவின் நல்லெண்ணக் கால கட்டம் முடிவடைந்து விட்டது போல எமக்குத் தோன்றுகிறது. அது உண்மையா?

ப: எனக்குத் தெரியாது. அவ்வாறு எமக்கு கூறப்படவில்லை. இதற்கு முன் நாம் நீட்டிய நேசக் கரத்தை இலங்கை ஏற்றுக் கொண்டது. இல்லாவிடின் இங்கிருந்து எவரையும் எப்பொழுதும் அங்கு அனுப்பியிருக்க மாட்டோம். நான் முன்பு கூறியது போலத் தலையிடும் எண்ணம் எமக்கு இல்லை. ஆனல் இலங்கைப் பிரச்சினையில் எமது மக்களும் சம்பந்தப்பட்டுள்ளதால் நாம் அக்கறையின்றியும்இருக்க முடியாது. எந்த ஒரு நாடும் தமது மக்களின் பிரச்சினையிய் அக்கறை எடுக்கவே செய்யும்.

கே: கொழும்பில் அமைக்கபட்டுள்ள இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவு ஒரு தொல்லை என்று கருதுகிறீர்களா?

ப: இஸ்ரேலியப் பிரிவை கொழும்பில் புகுத்தியது சம்பந்தமாக, இலங்கைக்குள்ளேயே பல்வேறு சமூகங்களுக்கிடையிலும், தீவிரமான எதிர்ப்புஇருந்து வருகிறது. எம்மைப் பொறுத்தவரை எமது கடலெல்லையோரத்தில் இருக்கும் சிறீலங்காவில் அந்நியர் தங்க இடம் அளிக்கப் படுவது எமக்கெல்லாம் ஒரு பயமுறுத்தலாகும்.

கே: இஸ்ரேல்—லெபனன் பிரச்சினை போல இலங்கையிலும் உருவாகி வருவதாக யாரோ கூறியிருந்தனர்—நீங்கள் அதை நம்புகிறீர்களா?

ப: இஸ்ரேலியரை சிறீலங்கா இறக்குமதி செய்திருப்பதன் உண்மையான நோக்கம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை; பயங்கரவாதிகளைச் சமாளிக்கவே இவர்களை வைத்திருப்பதாக ஜெயவர்த்தன கூறுகிறார். ஆனல் முன்பு நடைபெற்றது போல பயங்கரவாத ஒழிப்பு என்ற போர்வையில் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட மாட்டார்கள் என்று நம்புகிறேம்.

கே: தமிழர்களுக்கு எதிராக மறுபடியும் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டால், நீங்கள் வரையறுக்கப்பட்ட அளவிலாவது இராணுவ ரீதியாகத் தலையிடுவீர்களா?

ப: நாம் இதில் உண்மையிலே தலையிட முடியாது. ஆயினும் எமது அனைத்துச் சக்திகளையும் பாவித்து இதனை நிறுத்த முயற்சிப் போம்.

## விடுதலைப்புலி இயக்க வீரர் வீர மரணம்!

1979 ஆம் ஆண்டு முதல் தமிழீழ விடுதலைக்காக விடுதலைப் புலிகள் இயக்கம் நடத்திய அத்தனை கொரில்லாப் போராட்டங்களிலும் பங்கு பற்றி வீரசாதனை புரிந்தவரும் தமிழ் ஈழ நாட்டின் சுதந்திரத்துக்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்டவருமான புரட்சிப் போராளி ரஞ்சன் என்ற இளைஞர், இனவெறி பிடித்த சிங்கள ராணுவத்தினல் 13-7-84 இல் சுட்டுக் கொல்லப்பட்டு வீர மரணத்தைத்தழுவிக் கொண்டார். மோட்டார் சைக்கிளில் பின்புறம் இருந்து சென்ற வீரர் ரஞ்சன், சிங்கள இராணுவத்தின் ஆணைக்குக் கட்டுப்படாமல், சைக்கிளை நிறுத்தாமல் செல்லவே 400 யார் தூரத்தில வைத்துச் சுடப்பட்டார். சைக்கிளை ஓட்டி வந்த இளைஞர் எதுவித காயமுமின்றி ஓடித்தப்பி விட்டார்.

குருநகரில் இராணுவத்தினல் முற்றுகையிடப்பட்ட நிலையில், இயக்க கோட்பாட்டின் படி இரு இயக்கத் தொண்டர்கள் "சைனட்" மருந்து குடித்து தம்மை அழித்துக்கொண்டனர்.

இந்த வீர இளைஞர்களுக்கு 'வீரவேங்கை' தனது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

## EELAM IS AN INTERNATIONAL DISPUTE

"EELAM began as an internal dispute in Srilanka; Now it has grown into a Controversy in sub Continental Politics and it Could be thrown into the arena of Super-power and Chinese manoeuvrings in the INDIAN ocean. As the Srilanka government looks for allies against the insurgents."

— South (Regional Reports June 1984)

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரீதியாக இதை நீங்கள் முறியடித்து விட முடியாது. புரட்சிகர போராட்டச் சக்திகளை நீங்கள் 'பயங்கரவாதிகள்' என்பதால், தமிழர் பிரச்சினை தீரப் போவதில்லை. உங்கள் இராணுவத்தீர்வு உங்களுக்கே அழிவை ஏற் படுத்தும்.

"எங்களை நீங்கள் கண்டு கொள்ளவோ அடையாளம் காணவோ முடியாது. ஏனெனில் நாம் எவ்விடத்திலும் இருக்கிறேம். மக்கள் கடலுடன் சங்கமித்து இருக்கிறேம். இன்னும் சொல்லப் போனல், மக்களே நாம்தான்.

"எங்கள் மக்களின் மன உறுதி மலையைப் போன்றது. எவ்வளவு சக்தி வாய்ந்த அரசாக இருந்தாலும், மக்களுக்கு எதிரான போரில் அது வெற்றிவாகை சூடியதில்லை.

உங்கள் அரசின் அக்கிரமத்தினல் நாளாந்தம் எமது மக்கள் சிந்தும் ஒவ்வொரு சொட்டுக் கண்ணீரும், செந்நீரும், உங்கள் அரசுக்கு எதிரான ஆயுதங்களாக மாறும்.

உங்கள் அரசுப்படைகளால் எதுவித காரணமும் இன்றிக் கொலை செய்யப்பட்ட அப்பாவித் தமிழர்களின் சாம்பலிலிருந்து ஆயிரக்கணக்கான புரட்சிகர விடுதலைப் போராளிகளை நாம் உருவாக்குவோம.

விடுதலைப் போராளிகளைச் சந்திக்கப் பய்ந்த கோழைகளான உங்கள் கூலிப்படைகள், அப்பாவி மக்களைச்சுட்டு தள்ளுகின்றன. இது கண்டு நாகரிக உலகம் நாணித் தலை குனிகிறது.

எமது மக்கள் கோழைகள் அல்லர்; அவர்கள் பெருமை வாய்ந்த வரலாறு படைத்தவர்கள். நாகரிகம் உள்ளவர்கள். உங்கள் ஒடுக்குமுறைகளுக்கு எதிரான எமது மக்களின் கோபம், ஒருநாள் எரிமலையாக வெடிக்கும். அது புரட்சிப் போராட்டமாக வடிவெடுக்கும்.

எத்தகைய இன்னல்கள் இடர்ப்பாடுகள் எதிர்ப்படினும், அவற்றுக்கெல்லாம் முகம் கொடுத்து எமது சுதந்திரத்திற்கான போரை முன்னெடுத்துச் சென்று, சுதந்திர சோசலிசத் தமிழீழ நாட்டை அமைத்தே தீருவோம் என்று திட்டவட்டமாக கூறுகிறேம்,

"சிங்கள அரச பயங்கரவாதிகளுக்கும் அவர்களது ஏஜண்டுகளுக்கும் தமிழீழத்தில் கல்லறை சமைப்போம்.

"சுதந்திரத்தை நோக்கி நடைபோடும் நாம் இப்புனித இலட்சியத்துக்காக உயிரை அர்ப்பணிக்கவும் தயாராக உள்ளோம். நாம் நிச்சயம் எமது விடுதலைப் போரில் வெற்றி பெறுவோம். எமது மக்களின் நியாயமான போராட்டத்தை நசுக்கும் முயற்சியில் நீங்கள் படு தோல்வியடைவீர்கள். இறுதியில் உலக மக்களின் மனச் சாட்சியில் நீங்கள் ஒரு குற்றவாளி ஆக்கப்படுவீர்கள்; உலக சரித்திரம் உங்களைத் தூற்றும்"

## சிங்கள ஆட்சியாளரின் பொய்ப் பிரசாரம்!

தமிழீழ விடுதலை இயக்கங்கள் ஒன்றுபடுவதை தடுப்பதற்கும், தமிழீழ விடுதலை இயக்கங்களின் ஆதரவாளர்களிடையே மோதுதலைத் தோற்றுவிப்பதற்கும், தமிழீழ மக்களிடையே மனப்பதட்டத்தையும் விரகதியையும் தோற்றுவிப்பதற்கும் இலங்கையில் தனது கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகைகளில் தமிழீழ விடுதலை இயக்கங்கள் தமிழ் நாட்டில் தமக்குள் மோதிக் கொள்வதாக, சிங்கள அரசு பொய்ப்பிரசாரம் ஒன்றை திட்டமிட்டு முடுக்கி விட்டுள்ளது. இதில் சிரிப்புக்குரிய விடயம், உமாமகேஸ்வரன் சுட்டு பிரபாகரன் மருத்துவமனையிலிருக்கிறர் என்பது ஆகும். இட்லர் கோயபல்சை வைத்துப் பொய்ப்பிரசாரம் செய்தது போல ஜெயவர்த்தனவும் செய்கிறன். தமிழ் மக்களே இதிலே ஈடுபட்டு மனம் குழம்பி விடாதீர்கள்!

## தமிழர் கூட்டணியின் நிலைப்பாடு

"இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியும் இந்திய அரசாங்கமும், இலங்கை அரசுடன் பேசி எந்த முடிவை எடுத்தாலும், அதை ஏற்றுக் கட்டுப்பட நான் தயாராக உள்ளேன்"

—த. வி. கூ. செயலதிபர் அமிர்தலிங்கம்

(இந்து 27-6-84)

"இலங்கை அரசுடன் உடன்பாடு செய்து கொள்ளும்படி இந்தியா எம்மை வலியுறுத்தினல், நாம் உடன்படிக்கை செய்யத்தான் வேண்டும். நாம் விரும்பினலும் விரும்பாவிடினும் இதுவே நிலைமை. இந்தியாவை விட்டால் எமக்கு வேறு கதி இல்லை.

—கரிகாலன் (நியூயோர்க் மாநாட்டில் இந்தியன எக்ஸ்பிரஸ் 2-7-84)

## சிங்களப் படைகள்மீது தமிழீழ கொரில்லா தாக்குதல்

யாழ்ப்பாணத்தில் இஸ்ரேலியப் படைகளிடம் பயிற்சி பெற்ற சிங்கள பொலீஸ் கொமாண்டோக்கள், இரு ஜீப் வண்டிகளில் மக்களைப் பயமுறுத்தியபடி வீதியில் திரிந்தனர். அவ்வண்டிகளை தமிழீழ விடுதலைப் போராளிகள் சக்திவாய்ந்த குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர். இதனல் ஜீப்வண்டிகள் சின்ன பின்னமாயின. 4 பொலீசார் உயிர் ஊசலாடுகிறது.

சம்பவம் நடந்த இடத்திற்கு வந்த வேறு பொலீசார், துப்பாக்கி பிரயோகம் செய்த போதிலும், அதற்கு முன்னதாகவே பொலீஸ் ஜீப் வண்டிகளில் இருந்த துப்பாக்கிகளையும் வெடிமருந்துகளையும் எடுத்துக்கொண்டு விடுதலைப்போராளிகள் மாயமாய் மறைந்து விட்டனர்.

பொலீஸ் சுட்டதில் அப்பாவி ஒருவரே காயம் அடைந்தார். இச்சம்பவம் 17-7-84 இல் இடம் பெற்றது. கடைகள் சிலவற்றையும் பொலிசார் தீயிட்டு எரித்தனர்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்